முச்சந்தி முரளி



"பதவிபடுத்திற பாட்டுக்கு என்னென்ன கூத்தெல்லாம் ரணில் ஆடப்போறாரோ?"


Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 210

ஞாயிற்றுக்கிழமை
23 ஜூன் 2024

ஆனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# தேசிய அரசு அமைக்க ரணில் இரகசிய முயற்சி?



## அமைச்சரவையும் மறுசீரமைப்பு கொழும்பு அரசியலில் பரபரப்பு

**கொழும்பு, ஜுன் 23**

**தேசிய அரசை அமைப்பதற்கும், அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கும் ரணில் இரகசிய முயற்சிகளை முன்னெடுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

14

## இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வாம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 23
இனப்பிரச்சினையை இனியும் இழுத்தடித்துக் கொண்டிருக்கக் கூடாது. அதற்கு விரைவான தொரு தீர்வு வழங்கப் படவேண்டும் என்று

14

## மர்மமான முறையில் நாய்கள் உயிரிழப்பு

### மன்னார் உப்புக்குளத்தில் சம்பவம்

விரிவு:- பக். 02

உதயநகர் பகுதியில்

## திருடப்பட்ட நகைகள் பொலிஸாரால் மீட்பு!

கிளிநொச்சி, ஜுன் 23
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் மேற்குப் பகுதியில் திருடப்பட்ட ஒன்பது பவுண் நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
கடந்த 16ஆம் திகதி வீட்டில் வைக்கப்பட்டிருந்த நகைகளைக் காணவில்லை என்று கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று

14

## சீயோன் தேவாலயத்தை சீரமைக்குமாறு உத்தரவு

### ஜனாதிபதி ரணில் பிறப்பிப்பு

மட்டக்களப்பு, ஜுன் 23
ஈஸ்டர் தாக்குதலின் பிரதான இலக்குகளில் ஒன்றாகவிருந்த மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தை நேற்று நேரில் பார்வையிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் புனரமைப்

14

## பணத்தை காலால் மிதித்த வர்த்தகருக்கு விசாரணை!

### கொழும்பிலிருந்து வந்தது உத்தரவு

யாழ்ப்பாணம், ஜுன் 23
பிரபல வர்த்தகர் ஒருவர் பணத்தை காலால் மிதிக்கும் வீடியோ பதிவுகள் அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், அது தொடர்

14

கொலைச் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய

## மேலதிக பொலிஸாரைக் குவித்து நெடுந்தீவில் நேற்றுத் தேடுதல்கள்

### இளைஞர்களும் இணைவு!

யாழ்ப்பாணம், ஜுன் 23
அடித்துக் கொல்லப்பட்ட இளைஞனின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரைத் தேடும் நடவடிக்கைகளுக்காக மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நெடுந்தீவில் நேற்றுத் தீவிரமான தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்

14

## திறன்பேசி திருட்டு யுவதி கைதானார்!

யாழ்ப்பாணம், ஜுன் 23
திறன்பேசியைத் திருடி விற்பனை செய்த பெண்ணொருவர், யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
திறன்பேசி தொலைந்தமை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில்

14

எல்லைதாண்டிய மீன்பிடி

## அமைச்சர் ஜெய்சங்கரிடம் மௌனித்தமை எதற்காக?

### தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் அடக்குமுறைக்கு எதிரான அமைப்பினர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுன் 23
இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்பில், தமிழ்க் கட்சிகள் ஏன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் பேசவில்லை? என்று அடக்குமுறைகளுக்கு எதிரான அமைப்பின் தலை

14

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மஹோற்சவமும் மலர் வெளியீடும்

யாழ்., ஜூன் 23
சாவகச்சேரி - சங்கத்தானை அருள்மிகு வைரவசுவாமி கந்த சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

கொடியேற்ற தினத்தன்று மாலை கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெறும். இந்த வெளியீட்டு நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ தி.சுப்பிரமணியக் குருக்கள் மற்றும் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ தேவபால. பிரசன்னா குருக்கள் ஆகியோரும், வாழ்த்துரையை ஆலய பரிபாலனசபைத்தலைவர் கு.சதாசிவமூர்த்தி அவர்களும், மலர் வெளியீட்டுஉரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் அவர்களும் நிகழ்த்தவுள்ளனர்.

மஹோற்சவப் பெருவிழாவின் 5 ஆம் நாள் மாலை 4.30 மணிக்கு ஆலயத்துக்கென பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட அழகிய திருமஞ்சம் வெள்ளோட்டம் இடம்பெற்று மறுநாள் 6 ஆம் நாள் மஞ்சத் திருவிழா முதன் முறையாக நடைபெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச)



## மன்னார் நுழைவாயிலில் இருந்த சோதனைச் சாவடி நீக்கப்பட்டது!

**மன்னார், ஜூன் 23**

**மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதான சோதனைச் சாவடி மற்றும் வீதித் தடைகள் என்பன நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.**

பல வருடங்களாக குறித்த சோதனைச் சாவடியால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதால் அதனை அகற்றுமாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புகள்,சிவில் செயற்பாட்டாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குறித்த சோதனைச் சாவடியை அகற்றித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதனையடுத்து பாலப் பகுதியில் காணப்பட்ட வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன், சோதனைகளும் நிறுத்தப்பட்டன. எனினும் அந்தப் பகுதியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-213-60)



## ஜெய்சங்கர் வருகை சூட்சுமம் இதுவே

### விமல் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 23
இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவு கட்டமைப்புகளை இந்தியாவுக்கு வழங்கல், அதானி குழுமத்துக்கு மின்கட்டமைப்பை வழங்கல் உள்ளிட்ட செயற்றிட்டம் என்பவற்றை நிறைவேற்றுவதற்காகவே இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சரின் விஜயத்தின் உண்மை நோக்கமென்ன என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும் .

ஆட்பதிவுத் திணைக்களம் அறிமுகப்படுத்தவுள்ள விசேட அடையாள அட்டை உட்பட 10 முதல் 12 வரையிலான செயற்றிட்டங்களை கைச்சாத்திடுவதற்கு இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக அறியமுடிகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளாரென்று அறியமுடிகின்றது.

இந்தியாவோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் உண்மைத்தன்மை என்ன என்பதை அரசாங்கம் சபைக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மர்மமான முறையில் நாய்கள் உயிரிழப்பு

### மன்னார் உப்புக்குளத்தில் சம்பவம்

மன்னார், ஜூன் 23
மன்னாரிலுள்ள உப்புக்குளம், நளவன் வாடி பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்கள், காகங்கள் என்பன கடந்த சில தினங்களாக மர்மமான முறையில் தொடர்ச்சியாக உயிரிழந்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



மிகவும் ஆரோக்கியமாக அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டு கிரமமான முறையில் பராமரிக்கப்பட்டு வந்த நாய்கள் திடீரென இறப்பது தங்களுக்கு வேதனையளிப்பதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். வீட்டு வளர்ப்பு நாய்கள் வீட்டில் இருந்து வெளியில் சென்ற நிலையிலே குறித்த சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

இதுவரை 8 நாய்கள் இவ்வாறு உயிரிழந்த நிலையில், மேலும் மூன்று நாய்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். குறித்த நாய்களுக்கு அப்பகுதியில் யாரோ நஞ்சு கலந்த உணவை வழங்கியிருக்கலாம் எனவும் மக்கள் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் குறித்து உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நாய்களின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ப-56)

## பணிப்புறக்கணிப்புக்கு உரிமையில்லை

### சிறைச்சாலைகள் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு ,ஜூன் 23
சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடியாது என சிறைச்சாலைகள் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்திருந்த நிலையில், இலங்கைச் சட்டப்படி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது என சிறைச்சாலைகள் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ-66-22)

## சங்காபிஷேகம்

யாழ்., ஜூன் 23
வடமராட்சி - துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து வல்லிபுர ஆழ்வார் மணவாளக் கோலத்தில்எழுந்தருளி வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்குஅருள்பாலிக்க உள்ளாரென ஆலய பிரதம குரு கண்ணன் ஐயா அறிவித்துள்ளார். (அ-25-100)

## முத்தையா முரளிதரன் கர்நாடகாவில் முதலீடு

கொழும்பு, ஜூன் 23
இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் ஆயிரத்து 400 கோடி ரூபா முதலீட்டில் குளிர்பான நிறுவனத்தை நிறுவியுள்ளார்.

அவர் தனது குளிர்பான நிறுவனத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தவுள்ளார்.

இந்தத் தொழிற்சாலை நிர்மாணத்துக்காக 46 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## கொடுப்பனவு

யாழ்., ஜூன் 23
தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான ஜூன் மாதக் கொடுப்பனவு நேற்று சனிக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## பறவைக்காய்ச்சல்; அவதானம்!

கொழும்பு, ஜூன் 23
பறவைக்காய்ச்சல் குறித்து இலங்கையர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தியா போன்ற அயல் நாடுகளில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் இன்புளுவன்ஸா வைரஸால் ஏற்படுகிறது. இது முதலில் பறவைகளைப் பாதிக்கிறது, பின்னர் வைரஸ் மற்ற விலங்குகளையும் மனிதர்களையும் தாக்குகின்றது.

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கு ஏற்படுவது அரிதாக இருந்தாலும், விலங்குகளுடன் சுற்றித் திரிபவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## பஞ்சாபிகேசனின் நூற்றாண்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 23
புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர் சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் கலாநிதி மு.பஞ்சாபிகேசனுக்கு தென்மராட்சி பிரதேச மக்களால் நூற்றாண்டு விழா நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சிறப்பு நூலொன்றும் வெளியிடப்படவுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளின் வேகத்தில் அடங்கியது அமெரிக்கா




துல்லியமான பந்துவீச்சாலும், அதிரடியான துடுப்பாட்டத்தாலும் ஐக்கிய அமெரிக்க அணியை மிக எளிதாக வென்றது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராக பார்படாஸ், ப்றிஜ்டவுன் கென்சிங்டன் ஓவல் விளையாட்டரங்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று நடைபெற்ற போட்டியில் களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அமெரிக்கா 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆறு பேர் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றபோதிலும் அவர்களால் கணிசமான ஓட்டங்களைப் பெற முடியாமற்போனது.

அண்ட்றீஸ் கௌஸ் 29 ஓட்டங்களையும், நிட்டிஷ் குமார் 20 ஓட்டங்களையும் பெற்று 2ஆவது விக்கெட்டில் 48 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 51 ஓட்டங்களாக உயர்த்தினர். ஆனால், அதன் பின்னர் 9 விக்கெட்டுகள் 78 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன. பந்துவீச்சில் ரொஸ்டன் சேஸ் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அண்ட்ரே ரசல் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ,அல்ஸாரி ஜோசப் 31ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனால் ஐக்கிய அமெரிக்க அணி 128 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

பதிலளித்தாடிய மேற்கிந்திய அணி, ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தில் இறங்கியது.

அந்த அணி 10.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 130 ஓட்டங்களைக் குவித்து மிக இலகுவாக வெற்றியீட்டியது. அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஷாய் ஹோப் 39 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 4 பவுண்டரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக 82 ஓட்டங்களைக் குவித்து ஆட்டம் இழக்காமல் இருந்தார் ஆட்டநாயகனாக மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி ஐக்கிய அமெரிக்காவை சுருட்டிய ரொஸ்டன் சேஸ் தெரிவானார். (அ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். .பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கடகம்:** பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆஞ்சநேயர் வழிபாடு நன்று.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். பிள்ளைகளுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மகாலட்சுமியை வழிபடுவதன் மூலம் பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

## நடேஸ்வரா சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 23

வலிகாமம் கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் வரிசையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி சம்பியனானது.

இரண்டாம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை யூனியன் கல்லூரியும், நான்காம் இடத்தைப் புனித ஹென்றியரசர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)

## பெண்கள் கிரிக்கெட் விக்ரோறியா வாகை

வலிகாமம் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுகள் வரிசையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் விக்ரோறியா கல்லூரி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இரண்டாம் இடத்தை நடேஸ்வராக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை இராமநாதன் கல்லூரியும், நான்காம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)



## பொசனில் 289 கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 23

பொசன் தினத்தை முன்னிட்டு 289 கைதிகள் ஜனாதிபதி விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனரென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, 283 ஆண் கைதிகளும் ஆறு பெண் கைதிகளுமே ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெற்றுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி மாலதி சிவராசா

**(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம் )**



பிறப்பு 16.02.1964 இறப்பு 20.06.2024

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை பொன்னையா லேன் அமுதசுரபியை வசிப்பிடமாகவும் கொண்ட மாலதி சிவராசா கடந்த 20-06-2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவராசா - லிங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், ஜெயசீலன் (கனடா), சியாமளா (கனடா), மஞ்சுளா (கனடா), ஜெயதேவன் (லண்டன்), கீத்தா (இலங்கை), ஜெயந்தி (கனடா), ஜெயரங்கன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதர்ஜினி, தயாபரன், தேவதாசன், சுமிதா, முரளிதரன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஐதுனன், ஜனனி, ஏரன், சேரா, அக்ஷா, ஐசாக் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், லருஷன், திவ்யா, தினேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அமுதசுரபி,
பென்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/55462) 1-1

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கிருபாமூர்த்தி சிந்துஜன்

அன்னை மடியில் 20.02.1988 கந்தன் அடியில் 26.06.2021

முழுதாய் மூன்று வருடங்கள் மறைந்தன!
நீ எம்மை விட்டகன்று! - நின்
நினைவுகள் என்றும் நம் அருகினிலே!
நீ நித்தம் வலம் வருவாய் நம்
நினைவினிலே!

உன்னுடல் மறைந்தாலும் !
உன் புன்சிரிப்பும், கலகலப்பும்
என்றும் வாழும் நம் இதயத்தினிலே!
நீ வாழ்ந்த வாழ்வியல் இன்று எம்
கண்ணீரில் புனைந்த நிழல்கள் என ஆனதுவே!

நின் நினைவுகள் யாவும் நம் வாழ்வின்
ஒவ்வொரு நொடியிலும் அனுபவங்களாய்
நிகழும்!
நின் நினைவின் வண்ணங்கள் எமை
அழகாய் என்றும் காக்கும்!

உனைக் காண மனமெல்லாம் ஏக்கம்
நிறைந்தாலும்!
அரனடியில் அமர்ந்து எம்மை
வழிப்படுத்தும்! - உனை நினைந்து நாம்
பணிகிறோம்!

*நின் தாழ் வணங்கி! விழி ஏகி! நன்றி நவில்கிறோம்!*
*யாதுமாகினாய்!*

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

'அக்கா அகம்'
[illegible], கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

என்றும் உன் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# காட்டு விலங்குகளால் அபாயம் எச்சரிக்கைப் பலகை அவசியம்!

## பொதுமக்கள் கோரிக்கை



**முல்லைத்தீவு, ஜுன் 23**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு முதன்மை வீதிகள் காடுகளுக்கு ஊடாகவே காணப்படுகின்றன. இதனால், அந்தப் பிரதேசத்தில் காட்டு விலங்குகளின் நடமாட்டத்தை அடையாளப்படுத்தும் வகையிலான அறிவித்தல் பதாகைகளை சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நட்டுவைக்க வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.**

மாங்குளம் தொடக்கம் கொக்காவில் வரையான ஏ-9 வீதி மற்றும் மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதி, ஒட்டுசுட்டான் - முள்ளியவளை வீதி, முள்ளியவளை -களிக்காடு ஊடாக நெடுங்கேணி வீதி, நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் வீதிகளை, இரவு நேரங்களிலும் பகல் நேரங்களிலும் காட்டு யானைகள் அதிகம் கடந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியின் ஒரு பகுதியில் மாத்திரம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அறிவித்தல் பதாகை ஒன்று நடப்பட்டுள்ளது.

ஏனைய இடங்களில் பதாகைகள் நடப்படாததால் முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் புதிதாக வரும் பயணிகள் விலங்குகளின் நடமாட்டத்தை அறிந்திருக்கமாட்டார்கள்.

எனவே பதாகைகளைநடுவதன் மூலம் அடர்ந்த காட்டுப்பகுதிகள் ஊடாகப் பயணிக்கும் பயணிகள் குறித்த பகுதியூடாக அவதானமாக பயணிக்கமுடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ப-19)



# நீரிழிவு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்.நீரிழிவுக்கழகமும் யாழ்.போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையமும் இணைந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வை அண்மையில் நடத்தின. 'நீரிழிவால் ஏற்படும் பாதிப்புகளும் நீரிழிவிலிருந்து விடுபடுவதற்கு செய்யப்பட வேண்டியவையும்' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலைய பொறுப்பு மருத்துவர் ம.அரவிந்தன் சிறப்புரையாற்றினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கல்வியியற்கல்லூரிக்கு பீடாதிபதியை நியமிக்குக

## கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 23

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் மாணவர்கள் மிக மோசமாக உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கல்லூரிக்கு உடனடியாக நிரந்தர பீடாதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் மாணவர்கள் மிக மோசமான உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று அங்கு கல்விபயிலும் ஆசிரிய மாணவர்கள் தரப்பிலிருந்தும், அவர்களின் பெற்றோரின் தரப்பிலிருந்தும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிக்கு ஒரு நிரந்தரமான பீடாதிபதி நியமிக்கப்படாத நிலையில், பதில் பீடாதிபதியின் தலைமையிலேயே இயங்கிக்கொண்டிருக்கிறது.

மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு அவசரமாக குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சிடம் கோருகின்றேன். உடனடியாக ஒரு நிரந்தர பீடாதிபதி ஒருவரை அந்தக் கல்வியியற் கல்லூரிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-இ)




# ஊராட்சி முற்ற கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ,ஜூன் 23

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வானது மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ. வாகீஷன், யாழ் மாவட்ட உதவிச் செயலாளர் செல்வி உ.தர்சினி, பிரதேச செயலர்கள், பல்துறைசார் அரச உயர் அலுவலர்கள்,கிறிசலிஸ் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், பால்நிலை கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், ஒன்றியத்தின் உறுப்பினர்கள், யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் அடையாளப்படுத்தபட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கு உள்ளடங்கலான தீர்வுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கிச் செல்லுதல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. (அ-22-159-66)



# சின்னம் சூட்டும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 23

வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் முன்னாள் முதல்வர் எஸ்.கனகசிங்கம், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் திருமதி ம.கேதீஸ்வரன், பழைய மாணவர்களான திருமதி சிவனேஸ்வரி, புஸ்பராசா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சின்னங்களை அணிவித்தனர். (ப-13)



# சமாதான நீதிவான் பதவியேற்பு

கொடிகாமம், ஜூன் 23

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியா லய ஆசிரியரும், மீசாலை காட்டு வளவு கந்தசுவாமி ஆலய பரிபாலன சபைச் செயலாளரும், சமூக செயற்பாட்டாளருமான, சிவகுமாரன் வித்தியதாசன் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி கௌரவ ஏ.யூட்சன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (அ-22-159)



# விளையாட்டுப் போட்டி

கொடிகாமம், ஜூன் 23

கிளி. தெற்கு வலயக் கல்வி அலுவலகம் நடத்திய இவ்வாண்டுக்கான விசேட கல்வி விளையாட்டுப் போட்டி கிளி. தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா தலைமையில் கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், வெனிவெல்கொல சிஸ்யோதா விசேட கல்வி மற்றும் உட்படுத்தற் கல்விக்கான தேசிய நிறுவக பொறுப்பதிகாரியும் விசேட கல்வி பிரிவு கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான யோ.துஸ்யந்தனும், கௌரவ விருந்தினர்களாக முகாமையாளர் எஸ். சதீஸ்குமார்.மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆசிரியர் செல்வி முருகேசு டேகலா, கிளிநொச்சி செரண்டிப் சிறுவர் இல்ல இணைப்பாளர் ஆர்.விஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டதுடன், 14 பாடசாலைகளைச் சேர்ந்த விசேட கல்வி அலகு மாணவர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ-22-159)



# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், ஜூன் 23

கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலைக்கு கே.பி.கே. கட்டட ஒப்பந்த நிறுவன பணிப்பாளரின் உதவித்திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் உடற்கல்வி பொறுப்பாசிரியரிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டன. (அ-22-159)



யாழ்ப்பாணம்,ஜூன் 23

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த பொசன் பாண் தானம் மற்றும் தாக சாந்தி வழங்கும் நிகழ்வு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் முன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.எஸ்.ஏ.சந்திரபால, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத், மன்னார் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி பிரசாந் ஜெயதிலக்க மற்றும் ஏனைய பொலிஸார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ-25-56)



கிளி/முழங்காவில் மகா வித்தியாலய மாணவ முதல்வர்களும் விசேட தேவை அலகு மாணவர்களும் பிரதி அதிபர் பா.மதனரூபன் தலைமையில் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு இம் மாதம் 14ஆம் திகதி விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (அ-22-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன்னொரு பேரரக்கன்

இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவுவதற்கான ஏதுநிலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், இது தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்திருக்கின்றது. இன்று உலகமெங்கும் பெரும் தலைவலியாக பறவைக் காய்ச்சல் மாறியுள்ள நிலையில், இலங்கையின் பெயர்சுட்டி விடுக்கப்பட்டிருக்கும் இந்த எச்சரிக் கையை அவ்வளவு சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. உண்மையில் இதுவொரு பாரதூரமான நிலைமை.

பறவைக் காய்ச்சலின் பிரதான வைரஸ் மாதி ரியான ஏவியன் இன்புளுவன்ஸா வருடாவருடம் உலக நாடுகளில் பரவி வந்தாலும், இந்த வருடம் இதன் தாக்கம் தீவிரம் பெற்றிருக்கின்றது. மாறியி ருக்கும் காலநிலைகள் மற்றும் தட்பவெப்ப நிலை களுக்கு ஏற்ப அந்த வைரஸும் தன்னைப் புதுப்புது மாதிரிகளில் வலுப்படுத்தி வைத்திருக்கின்றது என் பதே இந்தத் தீவிரமான தாக்கத்துக்கான பிரதான காரணம். ஜப்பான், அமெரிக்கா, கம்போடியா போன்ற நாடுகளில் லட்சக்கணக்கான பறவைகளும் கோழிகளும் இந்த வைரஸ் காரணமாகக் கொல் லப்பட்டிருக்கின்றன. அயல்நாடான இந்தியாவின் பதிவுகளோ மிகைஅச்சம் தரக்கூடிய வகையில் உள்ளன.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் வீதியில் இறந்துகிடந்த பலநூறு காகங்களுக்கு பறவைக் காய்ச்சல் இருந்ததும், அவற்றின் இறப்புக்கு அதுவே பிரதான காரணமாக அமைந்தமையும் உறுதிப்படுத் தப்பட்டிருக்கின்றது. அத்துடன், மனிதர்களுக்கும் இம்முறை ஏவியன் இன்புளுவன்ஸா பாதிப்பு தாராளமாகவே ஏற்பட்டிருப்பது அவதானிக்கப்பட் டுள்ளது. இவையெல்லாம் சேர்ந்துதான் இலங்கை யும் அத்தகைய ஆபத்தை எதிர்கொள்ளலாம் என்று எச்சரிக்கக் காரணமாகியிருக்கின்றன. இலங்கை ஒரு தீவுநாடாக இருப்பதால், இந்தத் தொற்று நிலைமை களில் இருந்து பாதுகாப்பாக உள்ளது என்று பொருளல்ல. கொரோனா பெருந்தொற்றின் போது ஒட்டுமொத்த இலங்கையும் முடக்கப் பட்டமை இதற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டு. இவ் வாறிருக்கையில், பறவைக் காய்ச்சல் தொடர்பில் இலங்கையின் சுகாதாரத்துறை கூடுதல் கரிசனை கொண்டிருக்க வேண்டியது தவிர்க்கப்பட முடியா ததே.

ஏவியன்இன்புளுவன்ஸாவைரஸ், கொரோனா வைரஸ் அளவுக்கு 'மனித உயிரிழப்புகளை' ஏற்படுத்தப்போவதில்லையாயினும், அதன் பாதிப்பும் பரவல் வேகமும் கொரோனா வைரஸை விடவும் கொடியது. அதற்கேற்ப அது பொரு ளாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்தவே செய் யும். கொரோனாப் பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புகள், கோத்தாபயவால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புகள் என அனைத்தும் இணைந்து இலங்கையை இன்றுவரை வதைத்தெறிந்து கொண்டிருக்கையில், மீண்டும் ஒரு பெருந்தொற்றை இலங்கையில் அனுமதிப்பதா னது எம் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தை யும் நாமே சவக்குழிகளில் தள்ளுவதற்கு ஒப்பானதே.

ஆதலால், போர்க்கால அடிப்படையில் வினையாற்ற வேண்டிய நிலைமையின் தீவிரத்தன்மையை உணர்ந்து தகுந்த தற்காப்பு, முற்காப்பு நடவடிக் கைகளை இலங்கை அரசாங்கமும் அதன் சுகாதாரத் துறையும் முன்னெடுக்கவேண்டும். தற்காப்பு நடவடிக்கைகள் தவிர்க்கப்படுமானால், தனிநபர் பொருளாதாரமும், நாட்டின் பொருளாதாரமும் மீண்டெழ முடியாத வகையில் பின்னடையும் என்பதில் மறுவிவாதம் இல்லை.



# மக்களின் பணத்தை சுருட்டினார் மல்கம்



### மைத்திரி புதிய குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 23**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு பல்வேறு உலக தரப்பினர்கள் பண உதவி வழங்கினார்கள். அது மக்களைச் சென்றடைந்ததா என்பது தொடர்பில் தெளிவான அறிக்கையை அவர் சமர்ப்பிக்கவேண்டும்.**

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் கத் தோலிக்க அமைப்புகள், உலக நாடுகள், பல் வேறு அமைப்புகள், மற்றும் இலங்கையின் உயர்மட்ட வர்த்தகர்கள் எனப் பலரும் கர்தினா லுக்குப் பணம் வழங்கியுள்ளனர். அவருக்குக் கிடைத்த பணம் தொடர்பில் தெளிவான அறிக் கையை வெளியிட வேண்டும். அது மக்க ளுக்கு சென்றடையவேண்டிய பணம்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அனைவருக்கும் இழப்பீடுகளை வழங்க நடவ டிக்கைகளை மேற்கொண்டேன். என்னுடைய சொந்தப் பணத்தையே இழப்பீடாக வழங்கி னேன். ஆனால் கர்தினாலோ இதுவரையில் எந்தவித தகவலையும் வெளியிடவில்லை- என்றார். (ச-இ)

## 8,139 ஆசிரியர் வெற்றிடம்

கொழும்பு, ஜூன் 23

மாகாணசபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் 8ஆயிரத்து 139 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித் துள்ளார்.

தற்போது நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக, ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மூன்றாண்டு காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட வுள்ளனர். புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஆசி ரியர்களின் எண்ணிக்கையும், எதிர்காலத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 11,048 ஆக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மைத்திரிக்கு பதிலடி!

கொழும்பு, ஜூன் 23

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக் கப்பட்டவர்களுக்கு பல தரப்பினர் வழங் கிய நிதியுதவி பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைந்துள்ளது. நாங்கள் செய் யும் உதவிகள் குறித்து எவருக்கும் தெரிவிப்பதில்லை.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபாலசிறிசேன முன்வைத்த குற்றச் சாட்டுக்கு இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை பதிலளித்துள்ளது. (ச-இ)

## மணிலா - இலங்கை மீள விமான சேவை

கொழும்பு, ஜூன் 23

பல வருடங்களுக்கு முன்னர் நிறுத் தப்பட்ட பிலிப்பைன்ஸின் மணிலாவுக் கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவையை மீண் டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் தூதுவர் தெரிவித் துள்ளார்.

அத்துடன், பிலிப்பைன்ஸ் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தர எதிர்பார்த்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

### தையிட்டியில்

## போராட்டக்காரருக்கு உயிர் அச்சுறுத்தல்!

தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரையை அகற்று மாறு தொடர்ச்சியாக மக்கள் போராடி வரும் நிலையில், நேற்றுமுன்தினம் விகாரைக்குச் சென்ற இராணுவ வாகனங்கள் போராட்டக்காரர்களுக்கு உயிர் அச்சுறுத் தலை விடுக்கும் வகையில் வேகமாகச் செலுத்திச் செல்லப்பட்டன. அத்துடன் அவை போராட்டக்காரர்க ளுக்கு இடையூறையும் ஏற்படுத்தியுள்ளன.

பொசன் முழுமதி நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை தையிட்டி திஸ்ஸ விகாரையில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெ டுக்கப்பட்ட போராட்டத்திலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-66)

### நாளை

24.06.2024

**திங்கட்கிழமை**

**ஆனி - 10**

சுபநேரம் : 11.55 - 01.25


ராகுகாலம் : 07.25 - 08.55

### நாளொரு நல்வார்த்தை

**கண்ணெதிரே காணும் ஒவ்வொருவரையும்
நம்புவது அபாயகரமானது.
அதைக் காட்டிலும் ஒருவரையும்
நம்பாதிருப்பது மிகவும் அபாயகரமானது.**

-ஐன்ஸ்டைன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட
கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

நினைவில் கொள்ள வேண்டிய திகதி

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை
**29 JUNE 2024**
(10:00AM TO 11:00AM)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI

Call us now:
077 147 1471

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் 'அம்மாச்சி'

யாழ்ப்பாணம், ஜூன் 23

அம்மாச்சி பாரம்பரிய உணவகம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கானையில் பஸ்தரிப்பு நிலையமருகே திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பங்கேற்று இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

சங்கானை பிரதேச சபையின் செயலாளர் பாலரூபன் தலைமையில் குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரணவநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஸ்ரீவர்ணன், சங்கானை பிரதேச செயலர் கவிதா, சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யதுநந்தன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-125)



## வேலைவாய்ப்பு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- சாரதி (Driver) வயது எல்லை 25 -35
- Computer Billing (ஆண்,பெண்)
- பொதிசெய்பவர்

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தெடர்புகளுக்கு:-

077 419 5015, 021 221 2770

(CS/791) J-1

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1989 இல் பிறந்த திருவாதிரை கி.பி (7) BSc பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி தகைமையுள்ள அரச/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமகன் தேவை. (காரைநகர் முன்னுரிமை)

LUXMY Narajana Marrige Service

(CS/55428) J-1

தொடர்பு:- 077 197 1667



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

## அம்மன் அருள் வாக்கு

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை

மாலை : 3.00 - 05.00 மணிவரை

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

திருமதி வே. மோகனதாஸ்

இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 071 241 1234, 021 221 1239

வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

+94 712 411 234

(CS/783) J-1

## வீடு வாடகைக்கு

சேர்ந்து இருக்கும் மாணவர்களுக்கு ஏற்ற சிறிய வீடு வாடகைக்கு உண்டு. 4ம் ஒழுங்கை, பிறவுன் வீதி.

தொடர்பு:- 077 772 2215

## வீடு வாடகைக்கு

யாழ் வண்ணார்பண்ணை ஓடை ஒழுங்கையில் சகல வசதிகளுடனான சிறிய வீடு 2 பேருக்கு மட்டும் வழங்கப்படும். (கொமோட் இல்லை)

இல.25/19,வண்ணார்பண்ணை ஓடை ஒழுங்கை.

(CS/55425) J-1

தொடர்பு:- 077 244 5706

## வேலையாள் தேவை

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னர் வேலையாள் (பெரிய பானை போடக்கூடியவர்) தேவை.

தொடர்புகளுக்கு

021 222 9393, 077 193 1570

(CS/55413) J-1

## காணியுடன் வீடு விற்பனைக்கு

புலவர் வீதி நவாலி வடக்கிலுள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 610 3558
070 610 3558

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply

Www.inaipa.com

(CS/795) J-1

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 417 9120, 076 358 2126, 076 225 4729

Whats app:- 0091 915 954 0807

(CS/55418) J-1

## காணிவிற்பனைக்கு

யாழ். வைத்தீஸ்வரா வீதியில் குடியிருப்பு மற்றும் வியாபார நோக்கங்களுக்குரிய 4 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. (வைத்தியசாலை, IT அலுவலகம், களஞ்சியசாலை போன்றவைக்கு உகந்த இடம்) விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

077 415 5897


(cs.55452) (N-1)






## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 04 . 1949



மறைவு 21 . 06 . 2024

## செல்லையா கனகராசா

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த செல்லையா கனகராசா நேற்றுமுன்தினம் (21.06.2024) வெள்ளிக் கிழமை அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராஜலக்ஷ்மி தம்பதியரின் மருமகனும், ஜெயந்திராணியின் அன்புக் கணவரும், மயூரனின் (Shakthi FM) பாசமிகு தந்தையும், மாதங்கியின் மாமனும், கமலநாதன், செல்வராணி, சற்குணதேவி ஆகியோரின் சகோதரரும், சிவாஜினி, மகாலிங்கம், நாகேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்தநயினார் கோயில் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மகன் - மயூரன்
(077 314 8435)

(cs55460) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1986, யாழிந்து, கார்த்திகை, Engineer, Jaffna, மணமகள் பதிவு இல : 10719, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. www.eqmarriageservice.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

அழையுங்கள் : 076 664 9401

(CR/42688) J-1

## மணமகள் தேவை

1995, யாழிந்து, திருவோணம், Doctor, Jaffna, மணமகன் பதிவு இல : 10259, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. www.eqmarriageservice.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

அழையுங்கள் : 076 664 9401

(CR/42700) J-1

## மணமகள் தேவை

1991, யாழிந்து, ஸ்வாதி, Software Engineer, Australia, மணமகன் (சொந்த இடம் - நயினாதீவு) பதிவு இல : 10708, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. www.eqmarriageservice.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

அழையுங்கள் : 076 664 9401

(CR/42698) J-1

## மணமகன் தேவை

1995, யாழிந்து, உத்தரம், Teacher, Jaffna, மணமகள், பதிவு இல : 10683, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. www.eqmarriageservice.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

அழையுங்கள் : 076 664 9401

(CR/42701) J-1

## வடகைக்கு உண்டு

யாழ் நகருக்கு அண்மையில் Beauty Parlour நடாத்துவதற்கேற்ற சிறிய பகுதி தளபாடங்களுடன் மகளிருக்கு வாடகைக்கு உண்டு.

074 217 0383

(CR/42702) J-1

## வேலை வாய்ப்பு

பயிற்சி பெற்ற ஜுகி மெஷின் இயக்குநர்கள், தரக்கட்டுப்பாடு (QC) அனுபவத்திற்கேற்ப உயர் சம்பளம் வழங்கப்படும். தங்குமிடம் இலவசம்.

தொலைபேசி:- 011 438 2302

(CR/42687) J-1

## மணமகள் தேவை

1989, யாழிந்து, பூரட்டாதி, Accountant, Germany, மணமகன் (சொந்த இடம் - கரவெட்டி) பதிவு இல : 10645, தரகர் கூலி இல்லை, பதிவுக் கட்டணம் மட்டுமே. www.eqmarriageservice.com இணையவழி திருமண சேவை. பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

அழையுங்கள் : 076 664 9401

(CR/42698) J-1

## விசா ஆலோசனை சேவை

சட்டரீதியான வழிமுறைகள் ஊடாக சரியான விசா ஆலோசனைகளை பெற்று உங்கள் வெளிநாட்டு கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

**எமது சேவைகள்**

நிராகரிக்கப்பட்ட விசாக்களை மீள பெற்றுத்தருகின்றோம். கனடா, பிரான்ஸ், இத்தாலி, போலாந்து, நியூஸ்லாந்து, அவுஸ்ரேலியா, லண்டன், ஜேர்மனி போன்ற சகல நாடுகளுக்குமான விசிட் விசா, செங்கன் விசா, வேலை விசாக்களுக்கான சேவை.


- வங்கி உத்தரவாதம்
- சகல விசா படிவங்கள் பூரணப்படுத்தல்

இந்தியாவில் இருந்து ஹோட்டல்களுக்கான பணியாளர்களை வரவழைத்து கொடுத்தல், கனடா ஆவணங்களை சமர்ப்பித்து 48 மணிநேரத்தில Finger Print ஏற்பாடுக்கான துரித சேவை.

(CS/28417) J-1

தொடர்பு:-
077 604 0373
+44 740 508 6762


# மரண அறிவித்தல்



## செல்லத்துரை பாலகிருஷ்ணன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலகிருஷ்ணன் நேற்று முன்தினம் (21.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ராஜநாச்சியார் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மபால் - வள்ளிக்கொடி தம்பதியரின் மருமகனும், ரஜனி அவர்களின் ஆருயிர்க் கணவரும், சத்தியவாணி (லண்டன்), துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சஞ்ஜேயன் (லண்டன்), ஜீவனா ஆகியோரின் மாமனாரும், பாலசுப்பிரமணியம் (நியூசிலாந்து), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், விஜயலக்சுமி (மலேசியா), அனுசியா (மலேசியா), காலஞ்சென்ற சந்திராதேவி (உமா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனிஷ், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ராதா, குலோத்துங்கபாரதி, கௌரி, யோகலஷ்மி, மங்கையர்க்கரசி, பால சுந்தரன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S Road,
மல்லாகம்.

(CS/55485) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிரத்தினம் பவானி



தோற்றம்
17.12.1972

மறைவு
22.06.2024

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், மயிலங்கூடல் இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிரத்தினம் பவானி நேற்று (22.06.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பிரத்தினத்தின் மனைவியும், நிருபனின் (சரண்) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் பேர்த்தியும், இரட்ணகுமார், ராஜகுமார், சிவகுமார், பராசத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவிதா, ராதா, சுமதி, பற்றிமாநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகேந்திரனின் அன்பு சகலியும்,திவிஷா, சணோயன், சபிரா, ரஜினா, விஷ்ருயன், இரதுர்யன், கம்சிஹா, டிலக்ஷன், கவிஷன், நிரேஷ், டயான், நிஷாந், லோகதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், லிஷானி, கம்ஷாஜினி, கவிஷானி ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக இல்லத்தில் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி லேன்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(CS/55471) N-1

தகவல்:
குடும்பத்தினர்.
077 554 5405
077 851 0671

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனை மறுப்பு!

## பொதுமக்கள் விசனம்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பூனைக்குச் சத்திரசிகிச்சை செய்வதற்கு திகதி வழங்கப்பட்டு, பின்னர் மறுக்கப்பட்ட சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த மூதாட்டியொருவர், தனது பூனையை கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நிலையில் அந்தப் பூனை இருந்ததால், சத்திரசிகிச்சைக்கான திகதி மருத்துவமனையால் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தினத்தில் மேற்படி மூதாட்டி பூனையை அழைத்துச்சென்றபோது, சத்திர சிகிச்சைக்காக பூனையை மயக்கமடைய வைக்கும் மருந்து இன்னமும் வரவில்லை என்று அவருக்குப் பதில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பிறிதொரு தினத்தில் பூனையைக் கொண்டுவருமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த வயோதிபப் பெண், நீங்கள் குறிப்பிட்டுத் தந்த திகதியில்தானே வந்தேன். அவ்வாறிருக்கையில் ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்? என்று வினவியுள்ளார். இதற்கு "ஆடு, மாடுகளுக்குத்தான் இங்கு மருத்துவம் வழங்கப்படும். பூனைக்கெல்லாம் மருத்துவம் வழங்கப்படமாட்டாது. உங்களுக்கு அவசரமெனில் தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்று கடும் தொனியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், வடமாகாண கால்நடை சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் சி.வசீகரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

கால்நடை மருத்துவமனைகளில் வாழ்வாதார விலங்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுண்டு. ஆனால், திகதியொன்று வழங்கிவிட்டு இவ்வாறு செயற்படக்கூடாது. எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் - என்றார். (அ-ம-125)



# மடு மாதாவுக்கு யூபிலி ஏற்பாடுகள் மும்முரம்

மன்னார், ஜூன் 23

மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட யூபிலி ஆண்டாக மடு அன்னையின் ஆடி பெருவிழா இம்முறை கொண்டாடப்படவுள்ள நிலையில் ஏற்பாட்டு ஒழுங்கு களை கவனிக்கும் முகமாக மன்னார் செயலரின் தலைமையில் அண்மையில் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தில் மடுப்பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், மாந்தை மேற்கு பிரதேச செயலர், சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், வனவளத்துறையினர், வனஜீவராசிகள் திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வானூர்தி இறங்கு தளம், பாலம்பிட்டி வீதி ஆகியவற்றுக்கு அருகாமையிலுள்ள பற்றைக்காடுகளை துப்புரவு செய்து, கடைகள் அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் பரப்புக் கடந்தான் வீதி துப்புரவு செய்யப்படவேண்டும் என வனவளத்துறை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டது. (ச-25-60)


## பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் வீடொன்றில் தங்கியிருந்து சிறிய குடும்பத்திற்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்யக்கூடிய 45 - 60 வயதிற்கு உட்பட்ட பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 235 3877

## சிலைகள் செய்து தரப்படும்

இறந்தவர்களின் நினைவாக 1 அடி முதல் 6 அடி வரையான Fiber சிலைகள் தத்ரூபமாக செய்து தரப்படும்.
தொடர்பு:- 077 077 1909
(CS/55472) N-1

## வீட்டுடன்கூடிய காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் கண்டி வீதிக்கு அருகிலுள்ள நிலப்பரப்பு 1 1/2. கொண்ட வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. மாடி வீடு கட்டக்கூடிய வசதி அமைப்பு உள்ளது. விலை 3 கோடி 80 இலட்சம்.
பேசித்தீர்மானிக்கப்படும்.
077 855 6382, 077 408 0578
(cr:42681) (N-1)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிலையம் - சங்கானை
விரும்பிய பாடத் தெரிவு, அனுபவம் மிக்க ஆசிரியர்கள், ஒரு பாட மாதக் கட்டணம்.
O/L மாணவர்களுக்கு - 150/-
A/L மாணவர்களுக்கு - 600/-
குபேரன் கட்டட மாடி, சங்கானை.
Tel : 077 675 1649
(CS/55448) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 076 177 4183
(CS/55476) N-1

## காணி விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும், யாழ் கொட்டடியில் 6 பரப்பு காணியும், யாழ் பிறவுண் வீதியில் 3 பரப்பு காணியும், யாழ் பலாலி வீதியில் பேபி போட்டோவுக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 723 2535

## நிலம் விற்பனைக்கு

33 பரப்பு மேட்டு நிலம், 11 பரப்பு நெல் நிலம், மொத்த காணி பரப்பு 44 தெளிவான பத்திரம். மின்சாரம் மற்றும் நீர் வசதி. யாழ்ப்பாண நகரிலிருந்து 6 கி.மீ. கல்லுண்டாய் வைரவர் கோயில் எதிரில் பிரதான வீதியை நோக்கிய காணி.
தொடர்பு:- 076 202 5812

## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலிலுள்ள மிக்ஷர் தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு அனுபவமுள்ள
வேலையாட்கள் (பெண்) தேவை.
தொடர்பு:- 077 920 9507
(CS/55458) J-1

## வேலைவாய்ப்பு

**கல்வி சார் ஊழியர்**

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

1. புவியியல் - Geography (Grade 6 - 11 English Medium
   - இடம் : உடுவில் மகளிர் கல்லூரி
   - காலம் : 24.06.2024 - 28.06.2024
   - நேரம் : காலை 8.30 மதியம் 1.00

அதிபர்
(cr42694) (N-1)

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் நாயன்மார் கட்டில் செம்மணி வீதிக்கு அருகில் இராமநாதன் வீதியில் 1 பரப்பு 12.5 குழி (1 துண்டு) அல்லது 3 பரப்பு 7 குழி (2 துண்டு) **விற்பனைக்கு உண்டு.** நல்லூர் கோவிலிலிருந்து 2Km. மிகச் சிறந்த நீர், நில வளம் உள்ள காணி.
தொடர்பு:- 077 514 9210
(CS/55789) J-1


# மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 04 . 1954 — இறப்பு 17 . 06 . 2024

## டாக்டர் ராஜினி அரியரட்ணம் (ராஜினி பயஸ்)

(பழைய மாணவி : புனித பிரிட்ஜெட்ஸ் கன்னியர்மடம் - கொழும்பு 07
திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயம் - யாழ்ப்பாணம்)

டாக்டர் ராஜினி அரியரட்ணம் அவர்கள் கடந்த 17.06.2024 திங்கட்கிழமை அன்று "ஆல்ட்ரின்சம்" செஸ்சீர் இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார் பேராசிரியர் அரியரட்ணத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான டானியல் கிறிஸ்ரியன் பயஸ் ஆகியோரின் அன்பு மகளாரும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்ரன் பயஸ், காமினி இராஜரட்ணம் மற்றும் கிறிக்ஷாந்தி சிறில், அமிர்தினி சந்தியாப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், டாக்டர் பிரியதர்சன் அரியரட்ணம், டாக்டர் சௌமியா செல்வநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும்,

டாக்டர் பார்த்தீபன் செல்வநாதனின் அன்புக்குரிய மாமியாரும், மார்த்தா, நிக்கலஸ் ஆகியோரின் அருமைப் பாட்டியும், டாக்டர் திரு செல்வநாதன், டாக்டர் திருமதி செல்வநாதன் அமரர் இராஜரட்ணம் மற்றும் டிலிப், றிஸ்சியா, மீரியம், சிவகுமார், வசந்தி, சிவகௌரி மற்றும் காலஞ்சென்ற தேவராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தபிசோ, கார்லா, டாக்டர் லெறாட்ரோ, ஜனன், டாக்டர் தர்சினி, கிளாரன்ஸ், ரவி, டாக்டர் மரிற்றா, நிஜல், மெலிற்றா, மெலிஷா, டாக்டர் ஜோயினா, எமா, டாக்டர் மேனன், வைஷாலி, தசங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிச்சேல், ஒஸ்ரின், ஜேம்ஸ், ஜேக்கப், இசபெல்லா, சௌபியா ஆகியோரின் பெரியத்தையும், (Grand Aunt) . காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி மேரி லூசில்லா (தி.கு.), திருமதி அலெக்ஸ் அமிர்தநாயகம், திருமதி பிளசம் மரியநாயகம், திருமதி அருளானந்தம், திருமதி வேதநாயகம், திருமதி அருள்நாயகம், திரு.P.J.அமிர்தநாயகம், திரு. மரியநாயகம் ஆகியோரின் ஆசை மருமகளாரும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**டாக்டர் ராஜினி அரியரட்ணம் அவர்களின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடுவோமாக.**

தகவல்:
பேராசிரியர் அரியரட்ணம்
இங்கிலாந்து
0044 7522 998030
(CS/55477) J-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 07 . 1947 — இறப்பு 21 . 06 . 2024

## செகராசசிங்கம் வள்ளியம்மை

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செகராசசிங்கம் வள்ளியம்மை நேற்று முன்தினம் (21.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செகராசசிங்கம் (பாபு - அருணா, பகிரதன் வெதுப்பக உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், பகிரதனின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று (சங்கானை) பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS/55474) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குக்கேட்டு வந்தால் தகுந்த பதிலளிப்போம்

## வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் காட்டம்

**மன்னார், ஜூன் 23**

**இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப் போன ஒரு விடயமாக உள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் பாராமுகமாவே உள்ளது. எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அப்போது நாம் அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிப்போம்.**

இவ்வாறு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விடயமாக உள்ளது. கடந்த வாரம் மன்னாருக்கு வந்திருந்த ஜனாதிபதியை சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை. வடக்கிலுள்ள பல்வேறு வளங்களை அந்நியர்களுக்கு கையளித்து எவ்வாறு இந்த நாட்டுக்கான வருவாயை பெற்றுக்கொள்ளலாம் என்பதே ஜனாதிபதியின் வருகைக்கு காரணமாகவுள்ளது. கடல் வளம் உட்பட, காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுகள் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுவிட்டன.

நாங்கள் மீனவர்களின் பிரச்சினையை கதைப்பதற்காக மாத்திரமே ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். அப்போது மீனவர்களே இறுதி முடிவு எடுப்பார்கள் -என்றார்.

(ச-25-56)





கிராமிய முகாமைத்துவ நிறுவனங்களுக்கான சம்மேளனமும், ஐக்கிய அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடத்திய நிகழ்வு 'மனித வாழ்வில் சமயச் சுதந்திரம்' என்ற தொனிப்பொருளில் மன்னார் நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், அருட்பணி எஸ். மாக்கஸ் அடிகளார், மஹா தர்மகுமாரக் குருக்கள், மௌலவியும் ஹாதி நீதிபதியுமான எஸ்.ஏ.அசீம், மன்னார் மாவட்ட சட்டத்தரணி எம்.பி.ரசீனா பர்காத், ஏ.டீ.ரி. நிறுவனத்தின் பிரதிநிதிகள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ச-25-60)

## தவறான முடிவெடுத்து சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 23

அல்வாய் மனோகராப் பகுதியைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவனொருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான். இந்தத் துயரச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவனின் தாயார் மறுதிருமணம் செய்து சென்ற நிலையில் தந்தை மற்றும் அப்பம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த சிறுவனே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான். பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-66)

**வாடகைக்கு**

யாழ் நகரில் வீடு, கடை வாடகைக்கு உண்டு

தொடர்பு:
077 345 0039, 075 348 0075

**நாகபூஷணி திருமண சேவை**

**பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவுசெய்யப்பட்டு, மிகத்துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.
10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(Bcas கம்பஸ் இற்கு பக்கத்து லேன்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

Jaffna College – Vaddukoddai
Prize Giving 2024
The principal, staff and students of Jaffna College
cordially invite
past teachers, past students, parents and well wishers
to the Prize Giving
at 4.00 p.m
on Thursday 27th June
at Jaffna College
Chief Guest: Prof. Pavithra Kailasapathy-University of Colombo

**கல்வி**

உயர்தரம் மீட்டல் வகுப்புக்கள்
தனியாக மற்றும் குழுவாக
கற்பிக்கப்படும்.
**பௌதீகவியல்,இரசாயனவியல்**
ஆசிரியர்: P.சிவா BSc(Hons)
தொடர்பு: 077 143 7475


**வேலையாட்கள் தேவை**

விளம்பரத்துறையில் வேலை வாய்ப்புகள் உள்ளன தகுந்த சம்பளம் தங்குமிட வசதிகளும் வழங்கப்படும்.
1. Field Workers 2. Marketing Excutive
3. Promoters
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.
கணினி அறிவு உள்ளவர்கள் மேலதிக தகைமையாக கருதப்படும்.
(CS 55478) (N-1)
More Details - 077 254 6511

**வேலைக்கு ஆள் தேவை**

களஞ்சிய காப்பாளரும் சிட்டை எழுதி வெளி கொடுக்கல் வாங்கல் பார்த்தல்
**குறிப்பு:** தங்குமிடத்தில் அனைத்து நாட்களும் தங்குவது கட்டாயம் (அளவெட்டி மத்தி யாழ்ப்பாணம்). வேலை நாட்கள் 4 or 5 ஏனைய நாட்களில் மேற்படிப்பினை மேற்கொள்பவர் விரும்பத்தக்கது. வேலை நாட்கள் சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 076 441 4749

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 03 . 1950

மறைவு 22 . 06 . 2024

### திரு பொன்னையா தயாபரமூர்த்தி

யாழ்/ காரைநகரினைப் பிறப்பிடமாகவும், இல 76.D-10 உருத்திரபுரம், கிளிநொச்சியினை வதிவிடமாகவும் கொண்ட திரு பொன்னையா தயாபரமூர்த்தி 22.06.2024 நேற்று (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-தையல்நாயகி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் பாசமிகு சகோதரனும் , லோகநாயகியின் பாசமிகு கணவரும், சசிகலா (உருத்திரபுரம்), வேணுகா (பளை), மதிவதனி (உருத்திரபுரம்), காலஞ்சென்ற லோகதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜீவாநந்தன் (உருத்திரபுரம்), றஜீப் (பளை), றமணசீலன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன் (பிரான்ஸ்), டிலக்சனா, பகலவன், சர்வீகன், யுவேஸ்வரன், நிவாஸ் (கிளி/உருத்திரபுரம் ம.வி), அபினயா, துவாரகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை 2024.06.24 (திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் உருத்திரபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
சசிகலா : 077 495 4102
மதிவதனி : 077 996 1162
வேணுகா : 070 583 4188

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 42736) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை அம்மனுக்கு தீர்த்தோற்சவம்





யாழ்ப்பாணம், ஜூன் 23

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. காலை 7.15 மணியளவில் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து கங்காதரணித் தீர்த்தக் கேணியில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று, பல்லாயிரக் கணக்கானஅடியவர்களின் அரோகரா கோஷங்கள் முழங்க அகிலம் காக்கும் நாகபூஷணி அம்மன் தீர்த்தமாடினார். இதேவேளை - நயினாதீவு ராஜமகா விகாரையின் விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரரும் தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-66)

# தங்கம் கடத்திய அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 23

48 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டு களை கடத்த முயன்ற விமான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இடைத்தங்கல் பிரயாணி ஒருவரால் கழிப்பறையில் விடப்பட்ட தங்க பிஸ்கட்டுகளை தனது காற்சட்டை பொக்கற்றினுள் வைத்து கடத்த முயன்றபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 15 வருடங்களாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணிபுரிந்துவரும் உத்தியோகத்தரே கைதுசெய்யப்பட்டார்.

அவர் 60 ஆயிரம் ரூபா பணத்துக்காகவே தங்க பிஸ்கட்டுகளை கடத்த முயன்றார் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (ச-6)

## தேசிய...

தேசிய அரசு அமைப்பதுடன், அமைச்சரவையை மறுசீரமைப்பது தொடர்பிலும் திரைமறைவில் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் அடுத்தவாரமளவில் தேசிய அரசு அமைக்கப்படும் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா உட்பட மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த தேசிய அரசில் இணையவுள்ளனர். ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப்பதவியொன்று வழங்கப்படவுள்ளது.

இந்த தேசிய அரசின்கீழ் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 'தேசிய' வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள உறுப்பினர்கள் பலரும் ரணிலுக்கு தமது ஆதரவை தேசிய அரசு ஊடாக நேரில் வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். எதிரணியின் பக்கமுள்ள மலையகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தேசிய அரசுடன் சங்கமிக்கவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## இனப்...

ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கு நேற்று பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 5 வருடங்களில் கிழக்கு மாகாணத்தை விரிவான அபிவிருத்திக்குக் கொண்டு செல்லும் சவாலை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்கும் அதேவேளையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்கான நாம் பாடுபடவேண்டும். மேலும், இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவேண்டும். கிழக்கு மாகாணம் வளர்ச்சி குறைந்த மாகாணமாகும். அடுத்த 5 வருடங்களிலும்கூட இந்த மாகாணத்தை அபிவிருத்தி குறைந்த மாகாணமாக கைவிட்டு விடமுடியாது. எனவே கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வேலைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதன்போது மக்களின் வருமான நிலையை உயர்த்தவேண்டும்.

நாட்டின் வளர்ச்சியடையாத ஏனைய மாகாணங்களை அபிவிருத்தி செய்யத் தேவையான வேலைத்திட்டத்தை நாங்கள் அமுல்படுத்தி வருகின்றோம். திருகோணமலை மாவட்டத்தில் பெரியதொரு அபிவிருத்தியை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். அதற்காக இந்தியா மற்றும் ஏனைய வெளிநாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். இந்தப் பகுதிகளுக்குப் புதிய தொழில்களையும் முதலீடுகளையும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## அமைச்சர்...

வர் தம்பி தம்பிராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இந்திய மீனவர்களின் அத்துமீறலால் இலங்கையின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதும், இலங்கை மீனவர்கள் பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளமையும் வெளிப்படையான நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜெய்சங்கரிடம் எதுவும் பேசியதாகத் தெரியவில்லை. எதற்காக இந்த விடயம் தொடர்பில் மௌனம் காக்கப்பட்டது?

இந்திய மீனவர்கள் எமது தொப்புள் கொடி உறவுகளாகவே இருந்தாலும், எமது வாழ்வாதாரமான கடற்றொழிலை அழித்துச் செல்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆதலால், இந்த விடயத்தில் எமது தமிழ்த் தலைவர்கள் இந்தியாவிடம் காக்கின்ற அமைதி, எமக்குச் செய்யும் துரோகமே.

தமிழ்ப் பிரதிநிதிகள் இந்தியத் தரப்புடன் பேசும்போது 13 ஆவது திருத்தத்தைப் பேசுவதைத் தவிர்த்து இலங்கையின் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் பேசவேண்டும். ஏனெனில் இந்தியா நினைத்தால் ஒரு மணித்தியாலத்துக்குள் இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தமுடியும் - என்றார். (அ-ம-20)

## சீயோன்...

புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக்காலை தேவாலயத்துக்குச் சென்ற ஜனாதிபதி ரணில், தேவாலயத்தின் பிரதான போதகர் ரொஷான் மகேசனுடன் கலந்துரையாடினார். இதன்போது, தேவாலயத்தின் சீரமைப்புப் பணிகள் இன்னமும் நிறைவடையவில்லை என்ற விடயம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி, அந்தப் பணிகளை விரைந்து முடிவுறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான சீரமைப்புப் பணிகளுக்கு இராணுவத்தின் உதவியை வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் இராணுவத் தளபதிக்குப் பணிப்புரை விடுத்தார். (அ-ம-26)

## பணத்தை...

பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தில் இருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய, யாழ்ப்பாணப் பொலிஸ்பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான தலைமையிலான குழுவினரால் மேற்படி வர்த்தகர் யாழ்ப்பாணப்பொலிஸ்நிலையத்துக்கு நேற்று அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவரின் வாக்குமூலம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26)

## மேலதிக...

டன. நெடுந்தீவுப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார். குறித்த இளைஞர் கொலையுடன் நால்வர் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில்சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஏனையவர்களைக் கைது செய்வதற்காக, நெடுந்தீவுப் பொலிஸாரும் அந்தப் பகுதி இளைஞர்களும் இணைந்து நேற்றுக்காலை முதல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இன்றும் தேடுதல்கள் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-66)

## திருடப்பட்ட...

முன்தினம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைக் கைது செய்ததுடன், அவர்களிடம் இருந்து மேற்படி நகைகளை மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

## திறன்பேசி...

அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து திறன்பேசியைக் கொள்வனவு செய்த இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு சாரதி மற்றும் உதவியாட்கள் தேவை.
(யாழ். மாநகர சபைக்குள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 076 56 15 492
070 57 15 335

## உடன் தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு பணியாளர் தேவை.
1. கணினி மூலம் சிட்டை எழுதுனர் (பெண்)
2. விற்பனை உதவியாளர் (ஆண்)

தொடர்பு: 077 - 666 1126

## கேற் விற்பனைக்கு

12 அடி நீளமும், 06 அடி உயரமும், அதற்குள் 3 அடி கதவுள்ள கேற்றும் உள்ளது என அறியத்தருகிறோம்.



தொடர்பு: 074 206 0576

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் றோட்டிற்கு அருகாமையில் நல்லதொரு வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
4 Rooms, 2 Halls, சமையலறை, சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்று, நல்ல தொழில் புரியும் 3 அல்லது 4 பேர் உள்ள குடும்பத்தினருக்கு கொடுக்கப்படும். முற்பணமாக 2 லட்சமும், வாடகை 40,000/= எனவும் அறியத்தருகின்றோம். நல்ல வருமானம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 074 206 0576 (CS 803) V-1

# பங்களாதேஷுக்கு இந்தியா மரண அடி

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், பங்களா தேஷை 50 ஓட்டங்களால் தோற்கடித்தது இந் திய அணி.**





முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான ரோகித் சர்மா மற்றும் கோலி இருவரும் சொல்லிக்கொள்ளும்படியான அடித் தளத்தை அமைத்துக்கொடுத்தனர். 11 பந்துகளில் 23 ஓட்டங்களைக் குவித் தார் அணித்தலைவர் ரோகித். ரோகித்தை வீழ்த்தினார் சகிப் அல் ஹசன். கோலி 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பண்ட் மற்றும் துபே இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 36 ஓட்டங்களுடன் பண்ட் டும், 34 ஓட்டங்களுடன் டுபேயும் ஆட்டமிழந்தனர். பாண்டியா கடைசிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்து 27 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா. பந்துவீச்சில் ஹசன் சகிப் மற்றும் ரசிட் ஹொசைன் இருவரும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பம் பலமாக அமையவில்லை. 13 ஓட்டங்க ளுடன் லித்தன் டாஸ் ஆட்டமிழந்தார். ரன்சிட் ஹொசைன் 29 ஓட்டங்களைப் பெற்றார். இதற் காக அவர் 31 பந்துகளை எதிர்கொண்டார். இலக் குச் சரிவு, சராசரிப் பின்னடைவு என இரு முனைப் போராட்டத்துக்குள் பங்களாதேஷ் தள் ளப்பட்டது. முன்வரிசையில் அணித்தலைவர் சான்டோ அதிகபட்சமாக 40 ஓட்டங்களையும், ரிஷட் ஹொசைன் பின்வரிசையில் 24 ஓட் டங்களையும் சேர்க்க முடிவில் 8 விக் கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ்.
இதையடுத்து 50 ஓட்டங்களால் இந்தியா வெற்றிபெற்றது. (ம)

## 2 ஆம் ஆண்டு நினைவுவஞ்சலி



அரும்பாக : 20.07.1974 சருகாக : 15.07.2022

**அமரர் கலைமதி செல்லத்துரை**
**(கணக்காளர்)**
(BBA (Hons), Dip in Pub ADM, MA in Pub ADM, LLB (Hons))
(முன்னாள் கணக்காளர் - வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம், முன்னாள் போதனாசிரியர் - அஞ்சல் பயிற்சிக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

எம் கண்ணை விட்டு
இம் மண்ணை விட்டு - மறைந்து
ஆண்டுகள் இரண்டாயிற்று
ஆனாலும் உன் குரல்
இன்னமும் எம்காதோரம் கேட்குதம்மா
உன் நினைவுகளை மட்டும் - இங்கு
விட்டு விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டாய்
நெஞ்சம் நிறைந்த உன் நினைவுகளோடு
எம் மீதி வாழ்வைக் கடத்துகிறோம்.

72/50, பனிக்கர் லேன்,
திருநெல்வேலி

பிரிவால் துயருறும்
தாய்,
சகோதரிகள்.

(cr.55470) (N-1)

# பிரேத பரிசோதனையில் உயிர் பிழைத்த நபர்

கொழும்பு, ஜூன் 23
உயிரிழந்த ஒருவரின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தி யபோது அந்தநபர் உயிருடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் புத்தளம் மதுரங்கு ளியப் பகுதியில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதா வது:-
குறித்தநபர் தென்னந்தோப்பில் மயங்கி வீழ்ந்து மர்மமானமுறையில் உயிரிழந் தார் என்றும் அவரின் இறப்பில் சந்தே கம் இருப்பதாகவும் அவரது உறவினர்க ளால் தெரிவிக்கப்பட்டது. அதனைய டுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனை யின்போதே அவர் உயிருடன் இருப் பது கண்டறியப்பட் டது.
அதனையடுத்து அவருக்கு உடனடி யாக சிகிச்சைய ளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு தகுதியான வரிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- சாரதி (Driver)

மேற்படி வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் நாளை (24.06.2024) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - பி.ப 2.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி
## (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

(CS/777) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 03.01.1992 விருட்சிக ராசி, கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு தகுந்த வரன் எதிர்பார்க்கின்றோம்.

தொழில் - Senior Quantity Surveyor.

தொடர்பு:- **077 468 8990**

(CS/55450) J-1

## SPOKEN ENGLISH & GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
GCE - A/L, O/L, பட்டதாரிகளுக்கு
Monday To Friday
காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை வகுப்புகள். ஒரு மாணவருக்கு 2 மணி நேரம்.
தேவையானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

K.Ganesh B.A **077 766 8725**

(CR/426831) J-1

## யாழ் வேலை வாய்ப்புகள்

Dewmasweb.com

**வேலையாட்கள் தேவையா?**

DEWMAS

**074 138 3368**

(CS/786) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (pvt) Ltd.

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

## உயர்வகை பல் வைத்திய சேவைக்கு....
## For Quality, Professional Dental Care

INTERNATIONAL DENTAL CARE

professional Dental Care in Sri Lanka — IDC

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD





**Colombo Branch**
NO. 79/9, W.A.Silva Mw, Wellawatta, Colombo - 06, Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376

**Vavuniya Branch**
Raaj Medical Lab. No:10, Bazaar Street, Vavuniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374 , + (94) 77 059 5221

**Jaffna Branch**
NO. 84, Stanly Road, Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547, + (94) 77 003 1548

Web : www.internationaldentalsrilanka.com
Email : internationaldentalcare@gmail.com

## பணியாளர் தேவை

**முதியோர் இல்லத்தில் வேலை செய்வதற்கு பணியாளர்கள் தேவை.**

தொடர்பு: **077 564 4303**

(CS/55469) J-1

## நல்லூரில் வீட்டின் பகுதி வாடகைக்கு

இரண்டு பெண்கள் மட்டும் குடியிருக்கலாம்.
தனி அறை, இணைந்த குளியலறை, மிகச் சிறிய சமையலறை, பெரிய ஹோல் கொண்டது.

Rent - 16000/-

**Call - 071 223 4566**

(CR/427704) J-1

## கணித வகுப்புகள்

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கான கணித வகுப்புகள் நேரடியாகவும், ZOOM மூலமும் இடம்பெறுகின்றன.
(இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணையலாம்)
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய், யாழ்ப்பாணம்.

தொடர்பு:- **076 686 7099**

(CS/55415) J-1

## PHYSICS CLASS

A/L பௌதிகவியல் வகுப்புகள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
நேரடி வகுப்புகள் மற்றும் ZOOM மூலமும் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் மாணவர்கள் இணையலாம்.
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய், யாழ்ப்பாணம்.

தொடர்பு:- **076 498 9961**

(CS/55416) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1980 ஆம் ஆண்டு மேஷ ராசி அச்சுவினி 2 ஆம் பாதம் இல் பிறந்த பிரிட்டிஷ் குடியுரிமை உள்ள Doctor மணமகனுக்கு தகுந்த பட்டதாரி மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS 55457) (N-1)

தொடர்பு: **077 086 8634**

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்களில் மழைக்கலாங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.
**Finex**ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க இராசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பொற்றுக்கொள்ளலாம்.
போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்
வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள் 15 வருட அனுபவமுள்ளவர்கள்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## விற்பனைக்கு

- 1 ஆம் குறுக்குத்தெருவில் காணி விற்பனைக்கு.
- நாவற்குழியில் காணி விற்பனைக்கு.
- தனங்களப்பில் தென்னந்தோட்டம் செய்யக் கூடிய வசதியுடைய காணி விற்பனைக்கு.
- இயக்கச்சி A9 வீதியிலிருந்து 400M தூரத்தில் பண்ணை செய்யக்கூடிய வசதியுடன் கூடிய கட்டடத்துடன் காணி விற்பனைக்கு.

Contact Number

Pirakanth Pavananthan **+94 77 221 5649**

(CS/55422) J-1

## பிரியாணி கேட்டரிங் சேவிஸ்

வீட்டு, அலுவலக நிகழ்வுகளுக்கு உயர்தர பாஸ்மதி அரிசி பிரியாணி வகைகளை Buffet, Bucket, Packet ஆக பெற்றுக்கொள்ளலாம்.
(வெஜ். பன்னீர். சிக்கன், மட்டன்) ரூ.450/- முதல்
இல. 1698, கே.கே.எஸ் வீதி, இணுவில்

**077 991 2628**

(CS/55444) J-1

## பெண் அலுவலக உதவியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல சாரதி பயிற்சி பாடசாலைக்கு பெண் அலுவலக உதவியாளர் தேவை. வயதெல்லை 18-35,
107 A1/17, YMCA கட்டடம் கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**077 922 7102**

(CS/55468) J-1

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ், ஜூன் 23
உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு, யாழ். போதனா மருத்துவமனையின் பிராந்திய குருதி வங்கி ஏற்பாடு செய்துள்ள 'குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு' யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

(ம-66-22)

## உதவித்திட்டம்

மட்டுவில் வடக்கு பனையடிப் பிள்ளையார் ஆலய அறக்கட்டளை நிதியத்தால் மட்டுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது. ஆலய மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-131)

செய்தி :021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper

> அந்தா இந்தாவென்று வாய்பார்த்து நின்ற தேர்தல்
> பந்தி வைச்சமாதிரி பல்லிளிக்கப் போகுது – இனிமேல்
> சந்தியெல்லாம் கும்பிட்டபடி நிக்கிறவைக்கு நாங்களும்
> மந்தியள் மாதிரி வாக்குப்போட வரிசை கட்டுவம் பாருங்கோ!
>
> – கொரோனாச் சித்தர்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆனி 9 | ஞாயிற்றுக்கிழமை (23.06.2024) | சிகரம் : 207

# வவுனியா புவிநடுக்கம்: அழிவுக்கான ஒரு முன்னெச்சரிக்கையா?



கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

வவுனியாவில் 2.3 அளவிலான புவியதிர்வு (Tremer) 18 ஆம் திகதி செவ்வாய் இரவு 11.01 மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது என புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தேசிய புவிநடுக்கத் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது. இந்தப்புவியதிர்வானது ஹக்மன, பள்ளேகல, மககனத ராவ புவிநடுக்க பதிவு நிலையங்களில் பதிவாகியுள்ளதாகப் பணயகம் குறிப்பிட்டுள்ளது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாத நிலையில் சில வீடுகளில் யன்னல்கள், கதவுகள் பலத்த சத்தத்துடன் அதிர்ந்ததாக மக்கள் குறிப்பிட்டனர். வவுனியா மக்களுக்கு இது முதல் அனுபவமாக இருந்தது.


உலகின் புவிநடுக்கப் பகுதிகளுள் ஒன்றாக இலங்கை முன்னர் கருதப்படவில்லை. ஆனால் 2022 இல் 7 புவிநடுக்கங்களும் 2023 இன் இறுதி மூன்று மாதங்களில் 9 புவிநடுக்கங்களும் பேருவளை, புத்தல, கிரிந்த, கோமரங்கடவல, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் இடம் பெற்றன. வருடாந்தம் 2 - 3 நிகழ்வுகள் மாத்திரமே இடம்பெறுவதைக் காணலாம். எனவே நிலத்திலும் சுற்றியுள்ள கடல் பகுதிகளிலும் சிறியளவான புவியதிர்வுகள் ஏற்படுவதற்கான காரணம் என்ன? பாரதூரமான புவிநடுக்க அழிவுகள் ஏற்படுவதற்கான ஒரு முன்னறிவிப்பாக இதனைக் (சில சமூக ஊடகங்களில் குறிப்பிட்டது போன்று) கருதமுடியுமா? இலங்கையின் கீழ் சிறிய தகடுகள் அதிகம் உள்ளனவா? அவற்றில் விலகல், ஒருங்கல் செயன்முறை ஏற்பட்டதைத்தான் இந்தப்புவியதிர்வு வெளிக்காட்டியதா? இம் மாற்றங்கள் பெரிதாக அமையும்போது பெரும் பாதிப்பை இலங்கைக்கு ஏற்படுத்துமா? இதற்கான தேடலின் பதிலிறுப்பாக இக்கட்டுரை அமைகின்றது.

புவியின் உட்பகுதியில் காணப்படும் பாறைகளில் இடம் பெறும் சடுதியான தாக்கங்களினால் அல்லது முறிவுகளினால் உருவாகும் அலைகள் புவியினூடாக எல்லாப் பகுதிகளையும் நோக்கிப் பரவுகின்றன. அக விசைகளினால் புவியின் உட்பகுதிகளில் நிகழும் இவ்வாறான முறிவுகள் அல்லது அசைவுகளே புவிநடுக்கங்களாகும். பாறைகளில் சடுதியாக ஏற்படும் அசைவின் மூலம் அதிர்வு அலைகள் உருவாக்கப்படுகின்றன. பாறைகளில் சிறியளவில் ஏற்படும் ஒரு வெடிப்புக் கூட நீண்ட தூரத்திற்குப் புவியினூடாக அலைகளை ஏற்படுத்தும். பாறைகளின் குறைகளில் ஏற்படும் நழுவுதலே புவிநடுக்கத்திற்கான பிரதான காரணமாக இருந்தாலும் சில புவிநடுக்கங்கள் எரிமலைச் செயற்பாட்டுடன் தொடர்புடையதாகவும் உள்ளன. பாறைகளின் குறைகளில் (Fault) ஏற்படும் புவி நடுக்கங்கள் தகட்டோட்டப் புவி நடுக்கம் எனப்படும்.




புவியில் ஆயிரக்கணக்கான நடுக்கங்கள் வருடா வருடம் ஏற்பட்டு வருகின்றன. அவற்றுள் சில நடுக்கங்களே வலிமை வாய்ந்ததாகவும் குடித்தொகை அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடியனவாகவும் இருக்கின்றன. புவி நடுக்கங்களிலிருந்து உலகின் எந்தப் பகுதியும் விலகி அமைந்திருக்கவில்லை. ஆனால் சில இடங்களில் அவை பலவீனமாக அமைந்திருப்பதினால் தாக்கங்கள் குறைவாக இருக்கின்றன. வருடா வருடம் மூன்று ரிச்டர் அளவுக்குக் குறைவான ஏறக்குறைய மூன்று இலட்சம் புவிநடுக்கங்கள் உலகின் பல பகுதிகளிலும் ஏற்படுகின்றன. ஆனால் எட்டு ரிச்டர் அளவிலான புவிநடுக்கங்கள் நீண்ட காலத்துக்கொரு முறையே ஏற்படுகின்றன.

> **புவியின் உட்பகுதியில் காணப்படும் பாறைகளில் இடம்பெறும் சடுதியான தாக்கங்களினால் அல்லது முறிவுகளினால் உருவாகும் அலைகள் புவியினூடாக எல்லாப் பகுதிகளையும் நோக்கிப் பரவுகின்றன. அக விசைகளினால் புவியின் உட்பகுதிகளில் நிகழும் இவ்வாறான முறிவுகள் அல்லது அசைவுகளே புவிநடுக்கங்களாகும்.**



உலகில் தோன்றும் புவிநடுக்கங்களின் விவரங்களை ஐக்கிய அமெரிக்காவின் புவிச்சரிதவியல் சங்கம் பேணி வருகின்றது. 1960 ஆம் ஆண்டின் பின்னரே புவிநடுக்கங்களின் அமைவிடங்கள் பற்றிய விவரங்கள் புவியதிர்வு வலயங்கள் மற்றும் தகட்டு எல்லைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆராயப்பட்டன. 1960 இல் ஹரிஹெஸ் (Harry Hess) என்பவர் உருகிய பாறைக் குழம்பானது அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள மத்திய சமுத்திரத் தொடர்களுக்குக் கீழே இருந்து மேல் நோக்கி வந்து உறைந்து சமுத்திர ஓட்டினை உருவாக்குகின்றது என்றார். இந்தப் புதிய கடற்றரையானது மத்திய தொடரிலிருந்து விலகிச் செல்லும் செயன்முறையையே இன்று கடல் தரை பரவுதல் (Seafloor Spreadign) என அழைப்பர். புவியோட்டு விருத்திக்குரிய தகடுகள் பற்றிய சிந்தனைகளின் விருத்திக்கு இந்தக் கருத்தியலே முக்கியமான படியாக அமைந்திருந்தது.


1960 இன் பிற்பகுதியில் குளோமர் சலஞ்சர் (Glomar Challenger) என்னும் கப்பலானது சமுத்திரத் தரையில் துளையிடும் பணிகளை ஆரம்பித்தது. சமுத்திரத்தில் ஏறக்குறைய ஒரு மைல் தூரம் வரை துளையிட்டு அங்குள்ள பாறைகள் மற்றும் அடையல்களை வெளிக்கொணர்ந்து புவி விஞ்ஞானிகளின் ஆய்வினை மேம்படுத்தியது. கடலின் தரையிலுள்ள அடையல்களின் ஊடாக எரிமலைக் குழம்புப் பாறைப் படை (Basalt Layer) வரைக்கும் துளையிடப்பட்டு அந்தப் படையின் நிலைமைகள் அறிந்து கொள்ளப்பட்டன. 1960 மற்றும் 1970 களில் கடல் தரை பற்றிய கண்டுபிடிப்பும், கண்டநகர்விற்கான பழங்காந்தவியல் ஆதாரங்களும் புவிச்சரிதவியலில் ஒரு விஞ்ஞானப் புரட்சி யையே ஏற்படுத்தியது. இந்தக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகளில் தகடுகள் பற்றிய விளக்கங்கள், தகட்டு எல்லைகளின் வகைகள்

02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா புவிநடுக்கம்:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




பற்றிய வரைவிலக்கணங்கள், குழப்பமான தகட்டு அசைவுகள், எரிமலைகள், புவி நடுக்கங்களுடன் தொடர்பான தகட்டு அசைவுகள், மலைத்தொடர்கள், கடல் குன்றுகளின் சங்கிலித் தொடர்கள், கடந்தகால தகட்டு அசைவுகளின் வரலாறு போன்றவை தெளிவுபடுத்தப்பட்டன. இவற்றிலிருந்து தான் நவீன தொழில்நுட்பக் கோட்பாடு தோற்றம் பெற்றது.

புவியின் கற்கோளமானது ஒரு திண்மமான ஓடாக (crust) இருப்பதுடன் ஏறக்குறைய இருபதுக்கு மேற்பட்ட தகடுகளைக் கொண்டதாக ஒன்றுடனொன்று தொடர்புபட்ட முறையில் நகர்ந்தும் செல்வதாகக் கருதப்படுகின்றது. இந்தத் தகடுகளுக்கிடையிலான எல்லைகளைப் புவி நடுக்கங்களின் பரம்பல் எல்லையிட்டுக் காட்டுகின்றது. அத்துடன் புவியைச் சுற்றி வரும் பூகோள இடநிலைப்படுத்தல் முறைமைத் (Global Positionign SystemGPS) தொழில்நுட்பத்தைக் கொண்ட செய்மதிகள் மூலம் புவிச்சரிதவியலாளர்கள் தகட்டசைவைத் துல்லியமாகக் கணிக்கும் வகையிலான முன்னேற்றங்களை இன்று பெற்றுள்ளனர்.

கண்ட நகர்விற்கான ஆதாரங்களைத் தேட முனைந்த விஞ்ஞானிகள் ஆழ்கடல் சமுத்திரத் தரை பற்றிய ஆய்வுகளில் கவனம் செலுத்தினர். அத்திலாந்திக் சமுத்திரத்தின் மத்தியில் காணப்படும் கடற்கீழ் மலைத்தொடர் (Mid Oceniac Ridge) ஐஸ்லாந்தின் தென் பகுதியிலிருந்து அந்தாட்டிக் வரை செல்கின்றது. இவை தொடர்பான தகவல்களுக்கு கடற்தரையின் ஆழத்தில் காணப்படும் வேறுபாடுகள் பற்றிய தகவல்கள் தேவையாக இருந்தன. 1950- 60 காலப் பகுதியில் சமுத்திரத்தின் ஊடாக நவீன சோனார் கருவிகளைக் காவிச் செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்ததினால் ஆழ்கடல் ஒலிமானியிலிருந்து சான்றுகள் பெறப்பட்டன. இந்தச் சான்றுகளின் அடிப்படையிலேயே சமுத்திரத் தரைகள் பற்றிய உலகப் படம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மூலம் மத்திய பாறைத் தொடர் எல்லாச் சமுத்திர வடிநிலங்களிலும் காணப்படுவதாக எடுத்துக்காட்டப்பட்டது.

புவி ஓடானது இந்தச் சமுத்திரப் பாறைத் தொடர்களினாலேயே தகடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை கற்கோளத் தகடுகள் (MidOceniac Ridge) எனப்படும். திண்மமான இந்தத் தகடுகள் அசையும் தன்மையைக் கொண்டிருப்பதனால் அவை புவியோட்டு விருத்திக்குரிய தகடுகள் (Tectnioc Plates) எனக் கூறப்படுகின்றன. புவியோடு ஏழு பிரதான தகடுகளாகப் பிரிக்கப்படுகின்றது. அத்துடன் நஷ்கா, கொக்கோஸ், கரீபியன், ரிவேரா, ஸ்கோசியா, கோர்டா, பிலிப்பைன்ஸ், அராபியன் போன்ற சிறிய தகடுகள் பலவும் பெரிய தகடுகளுக்கிடையில் காணப்படுகின்றன. பெரும்பாலான சிறிய தகடுகள் யாவும் புவி ஓட்டின் சமுத்திரத் தரைப் பகுதியிலேயே அமைந்துள்ளன. பிரதான ஏழு தகடுகளில் ஒன்றே அவுஸ்ரேலிய இந்தியத் தகடாகும். இத்தகட்டுப் பகுதியில் அவுஸ்ரேலியா மற்றும் இந்திய உப கண்டப் பகுதி, குறிப்பாக இலங்கை அதனுடன் சார்ந்த சமுத்திரப் பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்து சமுத்திரத்தின்

லான பகுதிக்குக் கீழ் காணப்படும் தகடானது பல்வேறு திசைகளிலும் இழுக்கப்படும் நிலையில் உள்ளது. கிழக்குப் பகுதி சுண்டாக் கடலின் கீழ் வழுக்கிச் செல்கின்றது. வடக்குப் பகுதி இமாலயப் பகுதியுடன் இறுகி நிற்கின்றது. இதனால் இவ் வடிநிலத்தின் நகர்வு வேகம் வேறுபாடாகக் காணப்படுகின்றது. இந்தப் பெரிய தகட்டிலேயே இலங்கை அமைந்துள்ளது. அதன் கீழ் சிறிய தகடுகள் எதுவும் இல்லை. அதனால் விலகல், ஒருங்கல் செயன்முறைகள் எதுவும் இடம்பெறுவதில்லை. பெரும் புவிநடுக்க அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான மையங்களாக அவுஸ்ரேலிய இந்தியத் தகட்டினைச் சுற்றியுள்ள எல்லைகள் அமைந்துள்ளன. அவ்வாறெனின் இங்கு இடம்பெறும் புவியதிர்வுக்கான செயன்முறை என்ன?

**புவியின் கற்கோளமானது ஒரு திண்மமான ஓடாக (crust) இருப்பதுடன் ஏறக்குறைய இருபதுக்கு மேற்பட்ட தகடுகளைக் கொண்டதாக ஒன்றுடனொன்று தொடர்புபட்ட முறையில் நகர்ந்தும் செல்வதாகக் கருதப்படுகின்றது. இந்தத் தகடுகளுக்கிடையிலான எல்லைகளைப் புவி நடுக்கங்களின் பரம்பல் எல்லையிட்டுக் காட்டுகின்றது.**

இலங்கைச் சூழலில் இடம்பெற்ற புவிநடுக்கங்களின் வரலாற்று ரீதியான தரவுகளைப் பார்க்கும் போது 1615 ஏப்ரல் 14 இல் ஏற்பட்ட புவிநடுக்கமே மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கொழும்பில் ஏற்பட்ட இப் புவிநடுக்கத்தினால் 200 வீடுகள் தரைமட்டமாகின. 2000 பேர் வரையில் இறந்தனர். கொழும்புத் துறைமுக நகரின் மேற்குப் பக்கச் சுவர் இடிந்து விழுந்தது. 1615 - 1800 காலத்தில் புவிநடுக்கங்கள் எதுவும் இலங்கையில் ஏற்படவில்லை. ஆனால் 1882, 1924, 1938, 1944 ஆகிய ஆண்டுகளில் புவிநடுக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 1938 இல் ஏற்பட்ட புவிநடுக்கம் மிக முக்கியமானதாகக் கருதப்படுவதுடன் புவிநடுக்கத்தின் மேன் மையம் (Epi center) மன்னார் பள்ளத்தாக்கு வலயத்தின் மத்திய அச்சில் இடம்பெற்றிருந்தது. இலங்கைச் சூழலில் இடம்பெற்ற 300 க்கு மேற்பட்ட புவிநடுக்கப் பதிவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது மன்னார் பிளவுப் பள்ளத்தாக்கு வலயம் (Rift Zone) மற்றும் கொமறின் பாறைத் தொடர் (Comoirn Ridge) ஆகிய இரண்டும் முக்கியமான வையாகக் கருதப்பட்டன.

**இலங்கைச் சூழலில் இடம்பெற்ற புவி நடுக்கங்களின் வரலாற்று ரீதியான தரவுகளைப் பார்க்கும் போது 1615 ஏப்ரல் 14 இல் ஏற்பட்ட புவிநடுக்கமே மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கொழும்பில் ஏற்பட்ட இப் புவிநடுக்கத்தினால் 200 வீடுகள் தரைமட்டமாகின.**



1983 பெப்ரவரிக்கும் 1984 ஓகஸ்ட்டுக்கும் இடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 47 நுண் புவிநடுக் கங்கள் (Micro earthquacks) இடம்பெற்றுள்ளன. இவை றிச்டர் அளவுத்திட்டத்தில் 0.2 - 2.25 ஆகக் காணப்பட்டது. 2020 இல் விக்டோரியா அணைக்கு அண்மித்த பகுதிகளில் ஒன்பது புவியதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன. 2021 ஓகஸ்ட் 16 இல் இலங்கையின் தெற்காக 1200 Km தூரத்தில் இந்து சமுத்திரத்திலும் செப்டெம்பர் 2 இல் அம்பாந்தோட்டையிலிருந்து 120 Km தூரத்திலும் நில அதிர்வு ஏற்பட்டது. 2020 ஓகஸ்ட் 29 இல் 3.5 பருமன் அளவு கொண்ட புவியதிர்வு ஒன்று திகனப் பகுதியில் பதிவு செய்யப்பட்டது. இந்தக் காலத்தின் பின்னர் ஏற்பட்ட எல்லா அதிர்வுகளும் விக்ரோறியா அணையைச் சூழவுள்ள புவியதிர்வு உணர்விகளில் பதிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வுக்குப் பின்னர் செப்ரெம்பரில் இரண்டு அதிர்வுகளும், நவம்பரில் இரண்டு அதிர்வுகளும் இடம்பெற்றன.

2020 ஓகஸ்ட் 29 இருந்து 2020 நவம்பர் 30 வரைப்பட்ட காலத்தில் சிறியளவிலான புவியதிர்வுகள் கண்டிப் பிரதேசத்தில் குருதெனிய, ரஜமெல்ல, தலாத்து ஓயா, ஹரகம, மற்றும் அனுராகம பகுதிகளில் ஐந்து தடவைகள் பதிவு செய்யப்பட்டன. எனவே, இலங்கை நில அதிர்வு கொண்ட பிரதேசமென்பதை எவரும் மறுக்கமுடியாது. 2021 ஓகஸ்டில் ஏற்பட்ட நில அதிர்வு (4.3) களுத்துறை, மகரகம, மொறட்டுவ, பத்ரமுல்ல தெற்கு, தெகிவளை போன்ற பகுதிகளில் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையிலும், அதனை அண்மித்த சமுத்திரப் பகுதிகளிலும் ஏற்பட்டு வரும் மிகச் சிறிய அளவிலான பல நில அதிர்வுகளினால் மக்கள் மத்தியில் பயவுணர்வு தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் இலங்கையின்- பல பகுதிகளிலும் புவி நடுக்கப்பதிவுக் கருவிகளை (Seismograph) அரசாங்கம் நிறுவி வருகின்றது. 2010 இல் மககந்தராவ (Mahakandarawa), ஹக்மன (Hakmana) ஆகிய இடங்களில் இரண்டு கருவிகள் அமைக்கப்பட்டன. எதிர்காலத்தில் மேல் மற்றும் வடமேல் மாகாணத்திலும் இரண்டு கருவிகள் பொருத்தப்பட இருக்கின்றன.

இலங்கையின் அடித்தளமானது உறுதியான கேம்பிரியனுக்கு முந்திய பரிசை நிலமாக உயிர்ப்புடன் காணப்படும் குறைகளைக் (Faults) கொண்டதாக அமைந்துள்ளதுடன் கணிசமான அளவு தடிப்பான பழைமையான குளிர்ந்த புவி ஓடு காணப்படுவதினால் அடிக்கடி புவிநடுக்கங்கள் இடம்பெறுவதற்கான சாதகமான இடங்களாக அவை காணப்படவில்லை. இருந்தாலும், கடந்த காலத்தில் நாட்டில் சில அதிர்வுகள் உணரப்பட்டிருந்தன. இவற்றின் செறிவு மற்றும் வீச்சு மிகக் குறைவாக இருந்தன. பெரும்பாலான இவ்வதிர்வுகள் நாட்டின் தெற்கு, தென்கிழக்குப் பகுதியில் இடம்பெற்றன. இப்பகுதியிலுள்ள ஒடு சார்பளவில் மிகவும் மெல்லியதாகக் காணப்படுவதும் நாட்டின் ஏனைய பகுதிகளை விட வெப்பச் செயற்பாடு உயர்வாக இருப்பதும் இதற்குக் காரணமாகும்.

2020 செப்ரெம்பரில் இருந்து மூன்று மாதத்திற்குள் திகனவில் (Digana) ஆறாவது தடவையாக நான்கு புவியதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன. இப்பகுதியில் அமைந்துள்ள சுண்ணக்கல் அகழ்வுப் பகுதி அல்லது விக்ரோறியா அணை காணப்படும் பகுதிகளில் ஏற்பட்ட பாறை வெடிப்புக்களினாலேயே இது இடம்பெறுகின்றதென புவிச்சரிதவியல் நிபுணர்கள் குறிப்பிட்டனர். புவியதிர்வுகளின் மீள்நிகழ்வு (Recurrnece) என்பது புவியோட்டு விருத்திக்குரிய தகடுகளில் (Tectnioc Plates) இடம் பெறும் மாற்றமே என பேராசிரியர் அத்துல சேனாரத்ன என்பவர் குறிப்பிட்டார். விக்ரோறியா அணையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உணரப்பட்ட புவிநடுக்கத்திற்கு அப்பிரதேசத்தின் உட்பகுதிகளில் காணப்படும் சார்பளவிலான பலவீனமான சுண்ணக்கல் அல்லது நீர்த்தேக்கத்தின் பாறை வெடிப்புகளே காரணமாக இருக்கலாம் எனப் புவிச்சரிதவியலாளர்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

சூழல் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இப்புவியதிர்வுகளை ஆய்வு செய்து தனது அவதானிப்புகளையும், பரிந்துரைகளையும்

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா புவிநடுக்கம்:

அறிக்கையாக வழங்கியது. அண்மைக் காலத்தில் இடம்பெற்ற புவியதிர்வுகளை ஆய்வு செய்த இக் குழுவானது தனது அறிக்கையில் சில விடயங்களை எடுத்துக் கூறியது. டொலமைற் பாறைகளை அகழ்தல், கட்டட நிர்மாண நோக்கங்களுக்கு வெடி பொருள்களைப் பயன்படுத்துதல், புவியோட்டு விருத்திக்குரிய தகடுகளின் நடத்தைகள், பாறைவெடிப்புகள், விக்ரோரியா நீர்த் தேக்கத்தில் ஏற்படும் விரைவான நீர்மட்ட மாற்றங்கள் என்பன புவியதிர்விற்கான காரணங்களாக இருக்கலாமென இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டது. திரும்பத் திரும்ப இடம்பெறும் இவ்வதிர்வுகள் முக்கியமானதொரு புவிச்சரிதவியல் தோற்றப்பாட்டினை எமக்கு உணர்த்துகின்றன. ஆனால் விக்ரோறியா அணைக்கு இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையெனினும் இது ஒரு நல்ல சமிக்ஞை அல்ல எனவும் அத்துல சேனாரத்ன குறிப்பிட்டார். இலங்கைக்குத் தெற்காக 1000 Km தூரத்தில் புதிய புவியோட்டுத் தகடு உருவாகின்றது என 2016 இல் இவர் குறிப்பிட்டமை இங்கு நினைவுகொள்ளத் தக்கது.

கண்டிக்கு அண்மையில் விக்ரோறியா நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பகுதியில் முதன் முதலில் இடம்பெற்ற சிறியளவிலான புவிநடுக்கங்களின் காரணமாக அடிக்கடி ஏற்படும் புவியதிர்வுகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவரான அனுரா வல்பொல என்பவர் தலைமைப்பதவியில் நியமிக்கப்பட்டார். அவர் புவி நடுக்கம் ஏற்பட மாட்டாது என எவரும் கூறமுடியாது. புவிநடுக்கங்களை எதிர்வு கூறுவதற்கு உலகில் தொழில்நுட்பம் எதுவும் இல்லை. கடந்த இரண்டு வருடங்களாக காலத்திற்குக் காலம் இலங்கையிலும் அதனைச் சூழ்ந்துள்ள கடலிலும் ஏற்பட்டு வரும் சிறு சிறு அதிர்வுகளினால் குறுகிய காலத்தில் எமது நாட்டில் புவிநடுக்கம் ஏற்பட்டு விடுமோ என்று மக்கள் பயந்த நிலையில் காணப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டார். அவரின் இந்தக்கூற்று யதார்த்தமானது. இலங்கைப் புவிச்சரித வியலாளர்கள் காலத்துக் காலம் முரண்பாடான கருத்துகளையே முன்வைத்து வந்தனர்.




இந்தோ அவுஸ்ரேலியத் தகட்டின் மத்தியில், அதன் தகட்டு எல்லையிலிருந்து தூரத்தில் இலங்கை அமைந்துள்ளதனால் நில நடுக்கத்திலிருந்து விலகிப் பாதுகாப்பாக உள்ளதெனப் பலரும் குறிப்பிடுகின்ற னர். ஆனால் சில நிபுணர்களின் கருத்துப்படி இந்து சமுத்திரப் பகுதிகள் பெரும் நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்படக் கூடிய பகுதிகளாக உள்ளன என 2004 (9.2) சுமத்ராப் புவி நடுக்கத்தினை உதாரணம் காட்டிக் குறிப்பிடுகின்றனர். 2021 ஓகஸ்டில் ஏற்பட்ட நில அதிர்வு (4.3) களுத்துறை, மகரகம, மொறட்டுவ, பத்ரமுல்ல தெற்கு, தெகிவளை போன்ற பகுதிகளில் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பேராதனைப் பல்கலைக்கழகப் புவிச்சரிதவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சி.பி. திஸாநாயக்கா என்பவர் இலங்கையின் தெற்கே ஏறக்குறைய 400 - 500 Km தூரத்தில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் புதிய தகட்டு எல்லை காணப்படுவதாகக் குறிப்பிட்டார். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே மட்டக்களப்பிலிருந்து 400 Km தூரத்தில் புதிய தகடொன்று உருவாகியுள்ளதென்றும் அதனால் பெரும் புவிநடுக்க மொன்று கிழக்கில் ஏற்படப் போகின்றது என மக்கள் அச்சம் கொள்ளும் வகையில் அண்மையில் சிலர் தமது (தவறான) கருத்தினை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தகடும், அவுஸ்ரேலியத் தகடும் 45 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஒன்றிணைந்து உருவாக்கம் பெற்றவை. இருப்பினும், இவ்விரு தகடுகளுக்கும் இடையிலான நகர்வு 8 -10 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டதுடன் இன்று வரை தொடர்வதாகவும் உள்ளது. இந்தத்தகட்டுப் பகுதியில் ஆய்வினை மேற்கொண்ட சிங்கப்பூர், பிரான்ஸ், இந்தோனேசியா நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்து சமுத்திரத்தின் வார்டன் வடிநிலத் தரையில் புதிய தகட்டு எல்லையொன்று உருவாகின்றதற்கான நிலைமை இருப்பதாகக் கூறினர். இந்தப்பகுதியிலுள்ள தகட்டோட்ட உருமாற்றச் செயன்முறையை மேலும் அறிவதற்கு புவிநடுக்க அலைகளையும் சமுத்திரத் தரையின் இடத்தியலையும் (Topology) பற்றி ஆய்வு செய்தனர்.

ஆனால் 2012 இல் இந்து சமுத்திரத்தின் தென் மேற்குப் பகுதியில் அந்தமான் - சுமத்ரா பிரதேசத்தினைத் தாக்கிய இரண்டு புவிநடுக்கங்கள் கீழிறங்கு வலயம் நெடுகிலும் இடம்பெறாமல் அதற்கு மாறாக தகட்டின் மத்திய பகுதியில் ஏற்பட்ட பெரிய புவிநடுக்கங்களாகக் காணப்பட்டன. இதற்கான புவிச்சரிதவியல் சான்றுகளை அவதானிக்கும் பொழுது வார்டன் வடிநிலத்தில் (Wartno Baisn) தரைக்குக் கீழ் ஏற்படும் சில வகையான உருமாற்றமே இதற்குக் காரணம் எனத் தெரிய வந்தது. ஆராய்ச்சியாளர்களுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இந்து சமுத்திரத்தில் 2012 இல் ஏற்பட்ட வழக்கத்துக்கு மாறான இந்தப் பெரும் புவிநடுக்கத்தின் குறைத் தளமானது (fault plane) கற்கோளம், பாகுக் கோளத்தின் எல்லைக்கு நெருக்கமாகச் சென்றமை அவதானிக்கப்பட்டது. சிங்கப்பூர் நாயாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் புவி அவதான நிலையத்தின் (Earth Observation) விஞ்ஞானிகள் இந்தப்புவி நடுக்கத்தின் பின்னர் ஏற்பட்ட உருத்திரிபினை GPS மூலம் அளவீடு செய்தனர். புவி மேற்பரப்பளவீடு (Geodeitc observations) மூலமான அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்டு சமுத்திர கற்கோள பாகுக் கோள எல்லையின் கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்கு இதனை மேற்கொண்டனர். இதன்படி மேல் மூடிப் பகுதியில் நீரின் படையாக்கம் (stratiifcation) 60 - 70 Kmஆழத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

2012 இல் நடுக்கங்களுக்கு முன்னரும், பின்னரும் பதிவு செய்யப்பட்ட புவிநடுக்கத் தரவுகள், பல்கர் ஆய்வுக் கப்பல் மூலம் பெறப்பட்ட சமுத்திரத் தரையின் ஆழம் பற்றிய தரவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கடல் .. தரை பற்றிய உயர் தெளிவுதிறன் கொண்ட படிமங்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றின் மூலம் அப்பகுதியில் இடம்பெற்றிருந்த உருமாற்றங்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் பெறப்பட்டன. இந்தப்பகுப்பாய்வின் படி சுமத்ராக் கரைக்கு அப்பால் மேற்குப் பக்கமாகப் புதிய குறைத் தொகுதியொன்று (new fault system) விருத்தியாகியுள்ளது என்பது தெரியவந்தது. வார்டன் சமுத்திர நிலத்தில் புவிநடுக்கங்கள் ஏற்பட்ட குறிப்பிட்ட உடைவு வலயத்தில் 2015 மற்றும் 2016 இல் கப்பல்கள் மூலம் விஞ்ஞானிகளினால் சேகரிக்கப்பட்ட சமுத்திரத் தரையின் தரவுத் தொகுதிகள் ஆய்வு செய்யப்பட்ட போது உடைவு வலயத்தின் இடவிளக்கவியல் தெளிவாகத் தெரிந்தது. அடையல் காணப்படும் சமுத்திரத் தரை மற்றும் படுக்கைப் பாறைப் பகுதியில் ஒலி அலைகள் பட்டுத் திரும்பி வரும்போது நேரம் பதிவு செய்யப்பட்டு வடிநிலத்தின் புவிவெளியுருவ வியல் பாங்குகள் கப்பலில் இருந்த விஞ்ஞானிகளி னால் படமாகத் தயாரிக்கப்பட்டது. இந்தத்தரவுகளை ஆய்வு செய்த போது உருமாற்றத்தின் காரணமாக கிடை நழுவு குறைகளின்போது உருவாகும் அமுக்கங்கள் தகடுகளை இழுத்து வேறாக்கும் தள்ளல் செயன்முறைக்கான சான்றுகள் தெளிவாகியது.

உடைவு வலயத்தில் நழுவுக் குறையின் போது வேறாகத் தள்ளிவிடும் ஏறக்குறைய 62 வடிநிலங்கள் (pullapart basisn) படமாக்கப்பட்டன. இவற்றில் சில வடிநிலங்கள் 8Kmநீளமும் 3Kmஅகலமும் கொண்டு அமைந்துள்ளன. இவ்வடிநிலத்தின் தென் பகுதியில் இறக்கங்கள் (depressions) மிக ஆழமாகவும் (120 மீற்றர்), வடக்குப் பகுதியில் ஆழம் குறைந்தும் (5 மீற்றர்) காணப்படுகின்றது. கிடைநழுவு குறைகள் தென் எல்லைப் பகுதிக்குரிய தோற்றப்பாடாகக் காணப்படுவதுடன் ஒரு பிரதான குறையில் ஏற்படும் அதிர்வு ஏனைய சிறிய குறைகளிலும் இடம்பெறுகின்றது. இவ்வடிநிலங்கள் 2.3 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே உருவாக்கம் பெறத் தொடங்கியது. கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானியின் கருத்தின் படி இவ்வடிநிலமானது ஒரு முழுமையான தகட்டு எல்லையைக் கொண்டதாக இன்னமும் உருவாகவில்லை. ஆனால் பெருமளவு உருமாற்றங்கள் இடம்பெறும் பகுதியாக மாறியுள்ளது. இந்தோ அவுஸ்திரேலிய மகரக்கோட்டு தகட்டின் விலகல் தொடர்ந்து மிக மெதுவாக இடம் பெறுவதனால் இக் குறிப்பிட்ட குறை நெடுகிலும் இன்னொரு அழிவுதரும் புவிநடுக்கமொன்று அடுத்த 20,000 வருடங்களுக்கு ஒரு முறையே இந்து சமுத்திரத்தில் இடம் பெறலாம். அத்துடன் இத்தகடு முழுமையாக விலகித் துண்டாவதற்குப் பல மில்லியன் வருடங்கள் செல்லும் என்பது ஆய்வு முடிவாகும். 2012 புவிநடுக்க ஆய்வு முடிவுகளின்படி இலங்கைக்குத் தெற்காகவும், தென்கிழக்கிலும் கடந்த தசாப்தங்களாகவும் அண்மைக் காலத்திலும் இடம்பெற்று வரும் புவிநடுக்கங்களுக்கு இந்திய -அவுஸ்ரேலிய - மகரக் கோட்டுத் தகட்டின் உள்ளே (Intraplate) ஏற்படும் உருமாற்றங்களே காரணமாகும். அண்மையில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் ஏற்பட்ட 5.9 றிச்டர் புவிநடுக்கமும் இதே வகையைச் சார்ந்தது. எனவே இலங்கைக்கு அருகில் 400 கிலோ மீற்றர் தொலைவில் புதிய தகடு உருவாகியுள்ளது என்பது தவறான கருத்தாகும். விலகல் செயன்முறை பல மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. தனியான தகடாக உருமாற்றம் பெறுவதற்கு இன்னும் பல மில்லியன் வருடங்கள் எடுக்கும்.

எனவே, இலங்கையில் தற்பொழுது உணரப்பட்டுவரும் 3.0 றிச்டர் அளவுக்குக் குறைந்த நுண் புவியதிர்வுகள் இந்திய - அவுஸ்ரேலிய - மகரக் கோட்டுத் தகட்டிற்கு உள்ளே (Intraplate) ஏற்படும் (எல்லைகளில் அல்ல) பாறை உருத்திரிபுகளினாலேயே (Deformation) உருவாகின்றன. எனவே வவுனியாவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட புவியதிர்வு இந்திய - அவுஸ்ரேலியத் தகட்டிற்கு உள்ளே (Intraplate) இடம்பெற்ற (எல்லைகளில் அல்ல) பாறை உருத்திரிபுகளினால் உருவாக்கப்பட்ட ஓர் அதிர்வே ஆகும். இதனையிட்டு மக்கள் அச்சப்படத் தேவையில்லை. இதனையே பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அத்துல சேனாரத்தின என்பரும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இடர்கள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் கொண்டிருக்க வேண்டும்.



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

சுந்தரலிங்கத்துக்கு அமைச்சர் பதவியை வழங்கி சுந்தரலிங்கத்தின் ஆதரவுடன் இலங்கையை ஒற்றை ஆட்சி நாடாக பிரகடனப்படுத்திய டி.எஸ்.சேனநாயக்க இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததும் தனது சுயரூபத்தைக் காட்ட முற்பட்டார்.

1947ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கை-இந்திய காங்கிரஸ் ஆறு ஆசனங்களை பெற்றுக்கொண்டமை சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறித்து அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு டி.எஸ்.திட்டமிட்டார்.

6

இலங்கை சுதந்திரமடைந்து ஒரு வருடத்தில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது இலங்கை அரசு.

டி.எஸ்ஸின் சூழ்ச்சியை புரிந்து கொண்ட சுந்தரலிங்கம் தனது அமைச்சர் பதவியை தூக்கியெறிந்து விட்டு நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.

இந்திய- பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்ட விவாதத்தில் சுந்தரலிங்கம் "இன்று நீங்கள் இந்த நாட்டுக்காக இரத்தமும் வியர்வையும் சிந்தி உழைத்தவர்களை வெளியேற்றுகிறீர்கள். நீங்கள் அனைவரும் பௌத்தர்கள்;புத்தபெருமானை வழிபடுகிறீர்கள். புத்தர் இந்தியாவில்தான் பிறந்தவர். இனிமேல் புத்தர் இலங்கைக்கு வருவதாக இருந்தாலும் விசா எடுத்து தான் வர வேண்டும்" என தனது உரையில் தெரிவித்தார்.

வரலாறு தெரியாத சிலர், சுந்தரலிங்கம் இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்துக்கு ஆதரவளித்தார் என இன்று வரை எழுதி வருகின்றனர்.

(ஆதாரம்: K.T.Rajasingham Asian Tribune)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முனைவோரைக் கட்டியெழுப்புவது: தேசத்தைக் கட்டியெழுப்புவது

நிலாந்தன்



கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில், புங்கன்குளம் சந்தியில் அமைந்துள்ள ஒரு சுற்றுலா விடுதியில் ஒரு பரிசளிப்பு வைபவம் இடம் பெற்றது. தமிழ் நாட்டின் விருது நகர் ரோட்டறிக் கழகத்தின் இளையோருக்கான தலைமைத்துவ விருதுகளை வழங்கும் நிகழ்வு அது. (RYLA Rotary Youth Leadership Awards) கனடாவை மையமாகக் கொண்டியங்கும் 'ஈகுருவிபுதிய வெளிச்சம்' அமைப்பு தமிழகத்தின் இதயம் நல்லெண்ணெய் தயாரிப்பு நிறுவனத்தின் அனுசரணையோடு இளம் தொழில் முனைவோருக்கான வதிவிடக் கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்குபடுத்தியிருந்தது. இளம் தொழில் முனைவோரின் நம்பிக்கைகளை, தொழில் திறன்களைக் கட்டியெழுப்புவது அந்தக்கருத்தரங்கின் நோக்கமாகும். அதில் பங்குபற்றிய இளையோர் பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றினார்கள். அவர்கள் ஆற்றிய உரைகளின் சாராம்சம் கால முக்கியத்துவம் உடையது; அரசியல் முக்கியத்துவம் உடையது; நம்பிக்கையூட்டுவது.

அதில் ஓர் இளைஞர் பின்வரும் பொருள்பட பேசினார் "நான் யார்? இந்த நாட்டில் என்னுடைய பங்கு என்ன? என்ற கேள்வி என்னிடம் இருந்தது... இந்த வதிவிடக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பின் அதற்குரிய பதிலைப் பெற்றுக் கொண்டேன் " என்று. ஏனைய பெரும்பாலான இளையோர் தாங்கள் எந்தெந்தத் துறைகளில் தொழில் முனைவோராக எழுச்சி பெறுகிறார்கள் என்று பேசினார்கள். விசுவமடுவிலிருந்து வந்த ஓர் இளையவர் தான் எப்படி தனது சொந்தக் காயங்களில் இருந்து மீண்டு எழுந்தார் என்பதனைப் பேசினார். போரில் முகம் சிதைந்து கிடந்த அவர் எப்படி ஒரு தொழில் முனைவோராக வெற்றி பெற்றார் என்பதனை விளங்கப்படுத்தினார். அந்த இளையோரின் குரல்களிலும் வார்த்தைகளிலும் நம்பிக்கை பிரகாசித்தது. தமது தாய் நிலத்தில் தாம் தமது தொழில்களை கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையை அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

அந்த நம்பிக்கைதான் இங்கு இன்று இந்த கட்டுரையின் குவிமையம். இந்த நாட்டில் தன்னுடைய வகிபாகம் என்ன? தான் யார்? என்பதைக் குறித்து ஒரு தொகுதி இளையோர் சிந்திக்கிறார்கள். இன்னொரு தொகுதி அதன் வேர்களை அறுத்துக் கொண்டு புலம்பெயர்ந்து வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு கனேடிய விசா வழங்கும் அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். ஓர் அழகிய இளம் பெண் தன்னுடைய பாஸ்போர்ட்டைக் கையளிப்பதற்கு வந்திருந்தார். அவர் தன்னுடைய பாஸ்போர்ட்டை அங்கு கையளித்து விட்டு திரும்பி வருகையில் கவனித்தேன். அவருடைய கண்கள் அசாதாரணமாக மகிழ்ச்சியால் பூரித்து போயிருந்தன. கிடைத்தற்கரிய ஒரு பேறு கிடைத்ததுபோல அவர் நடந்து போனார். அந்த அலுவலகம் அமைந்திருக்கும் சிறிய வீதி காலி வீதியில் போய் ஏறும் சந்தியில் அவருடைய தாயும் சகோதரரும் அவருக்காக காத்து நின்றார்கள். அவர்களைக் கண்டதும் அவர் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டு வெற்றியின் வாசலில் நிற்பவர் போல நடந்து கொண்டார். இது முதலாவது அவதானிப்பு.

இரண்டாவது அவதானிப்பு. யாழ்ப்பாணத்தில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் கற்கும் பிள்ளைகளுக்கான தனியார் நிறுவனத்தின் பெயர்ப்பலகையில் பின்வருமாறு உண்டு " be a Canadian" "கனேடியனாக இரு புதிய வாழ்க்கையின் முதல்படி"

கனடாவுக்குப் போவது; லண்டனுக்குப் போவது; தாயகத்தை விட்டுப் போவது என்பது ஒரு பகுதி இளையோர் மத்தியில் தணியாத தாகமாக மாறி வருகிறது. அதே சமூகத்தில் இன்னொரு பகுதி இளையோர் இந்த நாட்டில் "என்னுடைய வகிபாகம் இது; நான் எனது தொழிலையும் நாட்டையும் ஒருசேரக் கட்டி எழுப்பப் போகிறேன்" என்று நம்பிக்கையோடு மேலெழுகிறார்கள்.

இக்கட்டுரை புலப்பெயர்ச்சிக்கு எதிரானது அல்ல. புலம்பெயர்பவர்களின் பயங்களை; கவலைகளை; எதிர்காலத்தைக் குறித்த கனவுகளை இக்கட்டுரை அவமதிக்கவில்லை. ஆனால் ஏற்கனவே நிலம் சிறுத்து வருகிறது. அதாவது தாயகம் சிறுத்து வருகிறது. இப்பொழுது சனமும் சிறுக்க தொடங்கிவிட்டது. இது தொடர்பாக திருத்தமான புள்ளி விவரங்கள் எந்த ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. கனடா அதன் விசிட் விசா விதிகளில் தளர்வுகளை ஏற்படுத்திய பின் அண்மைய ஆண்டுகளில் இதுவரை இருபதாயிரத்துக்கும் குறையாதவர்கள் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து விட்டதாக உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு புலம்பெயர்வதற்காகக் காத்திருக்கும் இளையவர்கள் மத்தியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக ஒரு மனநல மருத்துவர் அண்மையில் தெரிவித்தார். "இந்த நாட்டில், இந்தச் சமூகத்தில் நான் அதிககாலம் இருக்கப்போவதில்லை. இனி இது எனது நாடுமல்ல எனது சமூகமும் அல்ல. எனவே விசா கிடைப்பதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நான் எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகலாம்" என்று சிந்திக்கும் ஒரு பகுதி இளையவர்கள் மத்தியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதை அந்த மருத்துவர் சுட்டிக்காட்டினார். ஒருபுறம் நகர்ப்புறங்களில் அன்றாட கூலி வேலைக்கு ஆட்கள் இல்லை. பல வாகனம் திருத்தும் கடைகளில் உதவிக்கு ஆட்கள் இல்லை. மேசன் வேலை, வயரிங் வேலை, பெயிண்டிங் வேலை போன்ற வேலைகளுக்கும் உதவி ஆட்கள் கிடைப்பது அரிது. அன்றாடச் சம்பளத்துக்கு வருபவர்கள் கைபேசிகளை கொண்டு வருகிறார்கள். வேலை பாதி; கைபேசி பாதி.

இன்னொருபுறம் வேலையற்ற பட்டதாரிகள் வடக்கு - கிழக்கில் மட்டும் கிட்டத்தட்ட ஆறாயிரத்துக்கும் குறையாதவர்கள் வேலை வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கிறார்கள். தமது கல்வித் தகைமையைவிடக் கீழான உத்தியோகங்களுக்குப் போகிறார்கள்.

ஒருபுறம் கூலி வேலைகளுக்கு ஆட்கள் இல்லை. இன்னொருபுறம் பட்டதாரிகளுக்கு வேலை இல்லை. இப்படிப்பட்டதோர் சமூகத்தில் இருந்து படித்தவர்களும் முக்கியமான பொறுப்புகளை வகித்தவர்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதேசமூகத்தில் ஒரு சிறு தொகுதி தொழில் முனைவோர் அதுவும் இளையோர் நம்பிக்கையோடு மேடை ஏறுகிறார்கள்.

தொழில் முனைவோரைக் கட்டியெழுப்புவது என்பது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். அந்த அடிப்படையில் பார்த்தால் அந்த வதிவிடக் கருத்தரங்கு கவனிப்புக்குரியது. அதில் மற்றொரு செய்தியும் உண்டு

அந்தக் கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பும் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெரு முதலாளியுந்தான். வளவாளர்களாக வந்தவர்களும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான். தமிழகத்தின் விருதுநகர் ரோட்டறிக் கழகத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அது முன்னெடுக்கப்பட்டது.

அரசற்ற ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய தேச நிர்மாணத்தின் பங்காளிகள் என்று பார்க்கும்பொழுது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தையும் தமிழகத்தையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். நிதிப் பலம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமானது ஈழத் தமிழர்களின் ரத்தமும் சதையுமாக இருக்கிறது.

அது தாயக அரசியலில் தொலை இயக்கி வேலைகளைச் செய்கிறது என்ற குற்றச்சாட்டுகள் உண்டு; தாயகத்தோடு கலந்து பேசாமல் பிரகடனங்களை வெளியிடுகிறது என்ற குற்றச்சாட்டுகள் உண்டு; எனினும், தேசத்தைக் கட்டியெழுப்பும் செய்முறையைப் பொறுத்தவரை அதில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் முதன்மைப் பங்காளி. அடுத்தது தமிழகம்.

நிதிப்பலம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமானது தமிழகத்தின் திரைப்படத் தொழிற்துறைக்குள் செல்வாக்குமிக்க முதலீட்டாளர்களாக வளர்ச்சி பெற்று வருகிறது. அது பெருமளவுக்கு சீரியஸான கலை முதலீடு அல்ல. இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுக் காயங்களையும் கூட்டு மனோநிலையையும் பிரதிபலிக்கும் கலை முயற்சியும் அல்ல. அவை பெருமளவுக்கு ஜனரஞ்சகமானவை. ஆனால் கோடிக் கணக்கான காசு புரளும் முதலீடுகள்.

அதேசமயம், சினிமா தவிர தமிழகத்தின் ஏனைய தொழில்துறைகளில் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பின் முதலீடுகள் ஒப்பீட்டளவில் குறைவு. இது தொடர்பாக தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து ஒரு முதலீட்டுத் திட்டம் வகுக்கப்படவில்லை.

தமிழகம் புவியியல்ரீதியாகவும் இனரீதியாகவும் மொழிரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் ஈழத்தமிழர்களுக்கு மிக அருகில் காணப்படுகின்றது. இறுதிக்கட்டப் போரில் நடந்த துரதிர்ஷ்டவசமான சம்பவங்களின் விளைவாக இந்தப் பிணைப்புகள் அதிகம் சோதனைக்கு உள்ளாகியுள்ளன. மீனவர்கள் விவகாரம் தமிழகத்தில் இருந்து வரக்கூடிய பெரு முதலாளிகளால் தாங்கள் விழுங்கப்பட்டு விடுவோம் என்ற ஈழத்தமிழ் வணிகர்களின் அச்சம் போன்றவையும் அந்த உறவுகளை மேலும் சோதனைக்கு உள்ளாக்குகின்றன.

தமிழகம் இப்பொழுது இந்தியாவின் மிக வேகமாக முன்னேறும் மாநிலங்களில் ஒன்று. மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக அது இரண்டாவதாக பெரிய பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட மாநிலமாகக் காணப்படுகின்றது.

இப்படிப்பட்ட புதிய வளர்ச்சிகளின் பின்னணியில், நிதிப் பலம்மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திலிருந்து ஓர் அமைப்பும் இந்தியாவின் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாகிய தமிழகத்தைச் சேர்ந்த தொழிற்சார் வளவாளர்களும் இணைந்து இளம் தொழில் முனைவோருக்கான ஒரு வதிவிடக் கருத்தரங்கை நடத்தியிருக்கின்றனர்.

"இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று பாடிய ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து இளையவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், அதே இளையவர்கள் மத்தியில் தமது சொந்தத் திறமைகளின் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இது போன்ற கருத்தரங்குகள் உதவும். இந்த விடயத்தில் புலம்பெயர் அமைப்பு ஒன்றின் தன்னார்வ முயற்சிகளும் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற தாகமும், தமிழகத்தின் துறைசார் நிபுணத்துவமும் ஒன்றிணையும் பொழுது, அது புதிய நொதிப்புகளை ஏற்படுத்தமுடியும்.

தமிழ் நோக்கு நிலையில் இருந்து தாயகமும் டயஸ்பொறாவும் தமிழகமும் இணைந்து வளங்களையும் அறிவையும் பரிமாறிக் கொள்வதும் கூட்டு முதலீடுகளைக் குறித்துச் சிந்திப்பதும் பொருத்தமானவை. தாயகத்தில் உள்ள தொழில் முனைவோரைப் பொறுத்தவரை ஊரில் உழைக்கலாம், சொந்தக் காலில் நிற்கலாம் என்ற நம்பிக்கை அதிகரித்தால், வேரை அறுத்துக் கொண்டு தாய் நிலத்தை விட்டு வெளியேறும் நிலைமைகள் தோன்றாது. தாய் நிலத்தில் தன்னுடைய வகிபாகம் என்ன என்ற தெளிவு இருந்தால், இளைய தலைமுறை நாட்டை விட்டு வெளியேற விரும்பாது.

புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளும் தமிழக முதலாளிகளும் தாயகத்தில் முதலீடு செய்யவேண்டும். அதை கொழும்பின் நோக்கு நிலையில் இருந்து செய்வதை விடவும் தாயகம் தமிழகம் டயஸ்போரா ஆகிய முக்கூட்டு நோக்கு நிலையில் இருந்து செய்வது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஒப்பீட்டுளவில் பாதுகாப்பாக இருக்கும். குறிப்பாக, தாயகத்தைக் கட்டியெழுப்புவது என்ற நோக்கு நிலையில் அது அதிகம் பொருத்தமானதும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவிலால் காப்பாற்றப்பட்ட டொக்டர் ஜெயகுலராஜா மறைவு!

O சங்கரன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் திருக்கோவிலுக்கும் முக்கியமான இடம் உண்டு. அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 16ஆம் திகதி பிரிந்த மாமனிதர் மருத்துவக் கலாநிதி ஜெயகுலராஜாவை பற்றி நினைக்கையில் திருக்கோவிலையும் தவிர்த்துவிடமுடியாது.


திருக்கோவிலைச் சேர்ந்த எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜாவுக்கும் கணுக்கேணி, தண்ணீரூற்றை சேர்ந்த றோஸ் மனோன்மணிக்கும் மகனாக பிறந்தவர்தான் டானியல் ஜேசன் ஜெயகுலராஜா. இவரது சகோதர, சகோதரிகள் றோஸ் மிருணாளினிதேவி (பாக்கியம்), மேரி பத்மினிதேவி, பெஞ்சமின் ஜெயனந்தராஜா, சாமுவேல் ஜெயதிலகராஜா, ஜோய்ஸ் ஜெயகுமாரி ஆகியோராவர்.

தனது மைத்துனி முறையான கிறிஸ்டினா ஞானதிலகராணியை இவர் திருமணம் செய்தார். இந்தத் தம்பதியருக்கு டானியல் ஜேசன் என்ற மகன் பிறந்தார்.

27.10.1982 அன்று நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் சீலன், புலேந்திரன், ரகு (குண்டப்பா) ஆகிய போராளிகள் காயமடைந்தனர். முப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடாநாட்டில் காயமடைந்த இவர்கள் மூவரையும் காப்பாற்றுவது இலகுவான விடயமல்ல. மேலதிக சிகிச்சைக்காக தமிழகத்துக்கு அனுப்பும்வரை தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இந்தப்பணியில் டொக்டர் ஜெயகுலராஜா, அவரது சகோதரர் போதகர் ஜெயதிலகராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவரின் துணைவியாக விளங்கிய நிர்மலா ஆகியோர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டனர். போராளிகள் காயமடைந்ததால் அதற்குத் தேவையான மருந்துகளைப் பெற முயற்சிப்பர் எனக் கருதிய உளவுத்துறையினர் மருந்தகங்களை கண்காணித்தனர். குறிப்பிட்ட வகை மருந்துகளை கொள்வனவு செய்தவர் யார் என ஆராய்ந்தனர். அந்த வகையில் வண. பிதா சிங்கராயர் கைதானார். அதன் தொடர்ச்சியாக வண. பிதா சின்னராசாவும் மேற்குறிப்பிட்ட அனைவரும் கைதாகினர்.

வெலிக்கடைச் சிறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின்போது நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதலினால்தான் இவர்களாவது உயிர்தப்ப முடிந்தது. இந்த நடவடிக்கைகளின்போது 54 தமிழ் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். தமிழினம் எதிர்த் தாக்குதல் நடத்தாவிட்டால் உயிர் பிழைக்கமுடியாது என்பது அன்று கற்றுக்கொண்ட பாடம். இந்த இனம் தன்னைத் தற்காத்துக் கொள்ள நடத்திய போராட்டத்தைத்தான் 2009இன் பின்னர் அரசியலுக்குள் புகுந்தோர் வன்முறை என்று முகம் சுழிக்கின்றனர்.

வெலிக்கடைச் சிறைப் படுகொலை சர்வதேசத்தில் ஏற்படுத்திய தாக்கத்தாலோ என்னவோ எஞ்சியிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர். மீண்டும் தென்னிலங்கை சிறைக்கு மாற்றப்படலாம் என்ற காரணத்தாலும் தமது எஞ்சிய காலத்தை விடுதலைக்காக மீண்டும் பயன்படுத்தலாம் என்பதாலும் சகல இயக்கத்தவர்களும் தொடர்புபட்டவர்களும் சிறையை உடைத்து தப்பிப்பதென முடிவெடுத்தனர். இந்த நடவடிக்கையில் புலிகள் சார்பானோருக்கு சிறைக் காவலர்களை கட்டி வாயில் பிளாஸ்டர் போடும் பணி வழங்கப்பட்டது. பெண்கள் விடுதியில் இருந்த நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட் இயக்கத்தைச் சேர்ந்த மாணிக்கதாசனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுபோல், டக்ளஸ் போன்றோருக்கும் குறிப்பிட்ட பணி ஒதுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது மாணிக்கதாசனை தவிர மற்றெல்லோரும் தமக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றினர். தனிக்குழு ஒன்றை அமைத்து செயற்பட்ட பரமதேவா புலிகள் சார்பானோரை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றார். இவர்களை பொறுப்பேற்க ஒரு குழுவினர் சென்றனர். எனினும் சகோதரர்களான தானும் ஜெயதிலகராஜாவும் ஒன்றாகப் பயணிக்கக்கூடாது என டொக்டர் ஜெயகுலராஜா முடிவெடுத்தார். இடையில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இருவருமே பலியாகவேண்டுமே என யோசித்தார்.



27.10.1982 அன்று நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் சீலன், புலேந்திரன், ரகு (குண்டப்பா) ஆகிய போராளிகள் காயமடைந்தனர். முப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடாநாட்டில் காயமடைந்த இவர்கள் மூவரையும் காப்பாற்றுவது இலகுவான விடயமல்ல. மேலதிக சிகிச்சைக்காக தமிழகத்துக்கு அனுப்பும்வரை தேவையான சிகிச்சையை மேற்கொள்ளவேண்டும். இந்துப்பணியில் டொக்டர் ஜெயகுலராஜா, அவரது சகோதரர் போதகர் ஜெயதிலகராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவரின் துணைவியாக விளங்கிய நிர்மலா ஆகியோர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டனர்.

தனித்தனியாக பயணிப்பதை போதகரும் ஏற்றுக்கொண்டார். பாதுகாப்பான தங்குமிடங்களில் ஒன்றாக திருக்கோயிலும் இருந்தது. மட்டக்களப்பிலிருந்து திருக்கோயிலுக்கு படகில் செல்வதென முடிவெடுக்கப்பட்டது. இன உணர்வாளரான ஒரு முஸ்லிம் சகோதரர் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திருக்கோயிலுக்கு படகு சென்றதை அரசின் உளவாளியான பனிக் கோபால் கண்டு கொண்டார். இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் எல்லாத் தடயங்களையும் இல்லாமல் அழிப்பதற்கு மிக வேகமாகச் செயற்பட்டனர். இந்த நிலையிலும் டொக்டருக்கு அறிமுகமான ஆனந்தப் போடியார் என்று அழைக்கப்படும் இராஜதுரை ஆனந்தராஜா பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்த நிலையில், டொக்டரை தவிர ஏனையோரை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தோசம் திருமலை வழியாக அவர்களை அழைத்துச் சென்றார். டொக்டரை இன்னொரு போராளி பொறுப்பெடுத்துக் கொண்டார். இந்த நடவடிக்கைகளின்போது தனது வாகனத்தையும் பல்வேறு உதவிகளையும் வழங்கிய உதவினார் ஆனந்தப் போடியார். பஸ், கார், கால்நடை எனப் பல வழியிலும் பயணம் மேற்கொண்டு மன்னார் பரப்புக்கடந்தானை சேர்ந்தார் டொக்டர். பின்னர் கல் ஏற்றும் லொறி, பஸ், வள்ளம் எனத் தொடர்ந்த பயணம் முதலில் யாழ்ப்பாணத்தையும் பின்னர் படகின் மூலம் தமிழகத்திலும் நிறைவடைந்தது.



தமிழகத்துக்கு பயணமான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மருத்துவ பிரிவு, போன்றவற்றின் ஆரம்பப் பணிகளில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். இப்பணிகளில் பாலா அண்ணா, அடேல் அன்ரி ஆகியோரின் ஒத்துழைப்பும் இருந்தது.

தமிழகத்துக்கு பயணமான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மருத்துவப் பிரிவு, போன்றவற்றின் ஆரம்பப் பணிகளில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். இப்பணிகளில் பாலா அண்ணா, அடேல் அன்ரி ஆகியோரின் ஒத்துழைப்பும் இருந்தது. நாடு திரும்பியபின் சென். ஜோன்ஸ், சுண்டுக்குளி பாடசாலைகளின் நிர்வாகப் பணிகளிலும் ஈடுபட்டார். தொடர்ந்து முல்லை மாவட்ட மருத்துவ அதிகாரியாக (MOH) நியமிக்கப்பட்டார். ஏற்றிருந்த பொறுப்புகள் மூலமாகவும் விடுதலைப் பணிகள் வாயிலாகவும் மக்கள் மனதில் இடம்பிடித்த இவரை என்றென்றும் மறக்காது தமிழினம்.

★★★★★

மட்டக்களப்பு சிறையுடைப்பைத் தொடர்ந்து விடுதலைக்கான பங்களிப்பில் பெரும் பங்காற்றிய ஆனந்தப் போடியாரின் இழப்பை பெரும்துயரமாகவே உணர்கின்றனர் கிழக்கு மாகாண போராளிகளாக விளங்கியோர். விடுதலைப் போராட்டம் மௌனிக்கும் வரை (இந்திய இராணுவ காலம் உட்பட) நிதியாகவும், பொருளாகவும், நிலமாகவும் ஏதோவொரு வகையில் பங்களித்த ஆனந்தப் போடியாரின் நினைவுகள் என்றென்றும் மனதில் இருக்கும்.

அதேவேளை, ஆலயத்தில் கேட்கும் கணீரென்ற குரல், பொது விடயங்களுக்காக வாரி வழங்கும் வள்ளல் தன்மை போன்றவற்றால் என்றும் மறக்க முடியாதவராக இருக்கும் ஆனந்தப் போடியார் குறைந்தபட்சம் இரு தலைமுறைகளில் தனது பெயரைப் பதித்து வைத்துள்ளார். அவரின் மறைவு நிகழ்ந்து ஓராண்டு நெருங்கும் வேளையில் டொக்டரின் மறைவு அனைவரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சிகள் இருக்கும்வரை

இ.திருநாவுக்கரசு



காலங்களில் எவ்வளவோ மாற்றம். ஆனால் கோலங்களில் மாற்றமே இல்லை. முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் "பொடியனாக" இருக்கும் பொழுது கண்ட அதே புகையிரத நிலையம் தான் இன்றும் பதிந்த கூரையும் ஒடுங்கிய விறாந்தையும் மட்டும் கொண்ட அந்தக்கவுண்டரில் ரிக்கட் எடுப்பவர்கான ஒரு பெரிய கியூ. பத்துப் பேரை மட்டும் உள்ளடக்கிவிட்டு மற்ற எல்லாரையும் வெளியில் தள்ளிவிட்டு "ஓர வாங்கியமாக" நின்ற அந்தக் கவுண்டரின் யன்னல் ஊடாகப் பார்க்கிறேன்.

"சில்லறைக் காசு இருக்கே... எல்லாரும் விடியக்காலத்தாலை நோட்டுக்களோடை வந்தால் நான் என்ன மெசினிலையே சில்லறைக் காசை அச்சடிக்கிறது? உங்களுக்கு ஒரு யோசனை இருக்க வேணும்..." என்று கடுகடுப்போடு டிக்டிக் என்ற சத்தத்துடனும் டிக்கட்டுகளைப் படபடவென்று அடித்துத் தள்ளியபடி இருந்தார் கவுண்டர் உத்தியோகத்தர் மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை.

"அண்ணை... நீங்களும் ஒருக்கால் வெளியால் போனால் எல்லாம் சரியாப்போம்..." என்று ஒரு குரல் உத்தியோகத்தரின் கடுகடுப்பிற்கு மருந்து கொடுத்தாற் போல் கிண்டல் செய்ய மற்றவர்களும் கிண்டலை ஆமோதிப்பதுபோல் "கொடுப்புக்குள்" சிரிப்பதையும் அவதானிக்கின்றேன். காதில் கேட்டுவிட்டதோ என்னவோ?

"உங்களிட்டை தான்காசு இருக்கோ நானும் போய்க் காட்டுறேன்..." என்று மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை சபதம் செய்வதையும் பார்த்துவிட்டு "சரியாயப் போச்சு... இனி மீனாட்சி அக்காவின்ரை தாலிக்கொடி ஒண்டுதான் ஊரிலை மிச்சமெண்டு நினைச்சன். இப்ப அதுக்கும் வில்லங்கம் வந்து விட்டது..." என்றபடியே மிஸ்டர் சிதம்பரப்பிள்ளையின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு வீடு நோக்கி நடந்தேன்.

என் வீட்டு அயலவர்தான் மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை, அக் குடும்பத்தில் நடக்கும் எல்லா விடயங்களும் எனக்குத் தெரியும். என்னில் அவ்வளவு அன்பும் நம்பிக்கையும். அதனால் எல்லாவற்றையுமே அவர்கள் என்னிடம் சொல்லி விடுவார்கள். தினமும் "ஃபொரின்" போகும் ஆட்களையும், "ஃபொரினால்" வந்திறங்கும் சீமான்களையும் பார்த்துப் பார்த்துப் "ஃபொரின்" மயக்கத்திலே அமிழ்ந்துவிட்ட சிதம்பரப்பிள்ளை எப்படியும் வெளிக்கிளம்ப ஆரம்பமாகிவிட்டார். இவர் மனைவி... மீனாட்சி அக்கா. மற்ற பெண்களைப் போல் பணமும் பொருளும்தான் வாழ்க்கையின் சிகரங்கள் என்று எண்ணாத ஒரு குடும்பப் பெண். படித்தவள். கடும்உழைப்பும்சிக்கனமும். கணவன்பிள்ளைகளுடன் எந்நேரமும் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்து வாழ்ந்திடும் இன்பமும் தான் தன் வாழ்க்கையின் வெற்றி என்று நினைத்திடும் ஒரு புது விதமான பெண். இதனால் மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை வெளிநாடு செல்வதை அவள்விரும்பியதே கிடையாது.

"என்னப்பா, நான் கேட்ட விஷயம் என்ன மாதிரி...?வாற மாசம் கொழும்புக்கெல்லே றான்சர்... அங்க போறதிலும் பார்க்க, சவூதிப்பக்கம் போனால் நல்லாய் வந்திடலாமெல்லே. நீர் தாரும் தாலிக் கொடியை... நான் இரண்டு மாதத்திலை எடுத்துத்தாரன்..." என்று தாலிக் கொடிக்காகக் கெஞ்சுகிறார் சிதம்பரப்பிள்ளை.

" அவங்கள் நல்லாய்க் கொண்டந்து குவிக்கட்டும். நீங்கள் மாத்திரம் இந்தப் பேய் எண்ணத்தை விட்டிட்டு உங்கடைபாட்டிலே செய்த வேலையைச் செய்யுங்கோ எல்லாத்துக்கும் ஆண்டவன் ஒருத்தன் இருக்கான்..." என்று மனைவி மீனாட்சி ஒற்றைக் காலில் நின்ற சிதம்பரப்பிள்ளைக்கு உபதேசம் பண்ண "இந்தச் சனியன் எப்பவும் ஏதேனும் நல்ல காரியம் செய்ய வெண்டா விடாது என்று மனதுக்குள்ளே திட்டியபடி, இஞ்சை பார், அவன் கந்தசாமியின்ர பெண் சாதி ராஜேஸ் தாலிக் கொடியை கழட்டிக் கொடுத்திட்டாள். அவன் நாளைக்கு கொழும்புக்குப் போய் மிடிலீஸ்ட் போற விஷயத்திற்கு அஞ்சு கொடுக்க போறானாம். நீ சும்மா எல்லாத்துக்கும் பல்லி சொல்லிக் கொண்டு இருக்கிறாய்"

"நான் என்ரை மூளைக்கு எட்டியபடி சொல்லியாச்சு... நீங்கள் உங்கடை விருப்பப்படி செய்யுங்கோ... ஆனால் தாலியிலை மட்டும் கைவையாதையுங்கோ வேறை என்னெண்டாலும் செய்யுங்கோ" என்பதை மட்டும் சொல்லி மேலும் கரகரத்து புறுபுறுத்து சண்டையைப் பெரிதாக்காது வீட்டுக் குசினிக்குள் நுழைகிறாள் மீனாட்சி. தான் பெற்ற அருமைச் செல்வங்கள் வேகக் கொதித்த வெயிலிலை பள்ளிக்கூடத்தாலை வரப் போகிறார்கள். எப்படியும் ஒரு மணிக்கு முன் சாப்பாடு கொடுத்தாக வேண்டும். என்ற துடிப்பில் இரண்டொரு கறிகளை அடுப்பில் வைத்து இறக்கப் பிள்ளைகளும் வந்துவிட்டார்கள்..." என்னம்மா இண்டைக்குச் சுணங்கிப் போச்சு..." ஏக புதல்வி அமுதா கேட்க, "அப்பா மிடில் ஈஸ்ட் போகப் போறாராம். அதுகளைப் பற்றிக் கதைச்சதிலை கொஞ்சம் பிந்திப் போச்சு" என்றாள் மீனாட்சி.

"என்ன அப்பாவுக்கு அந்த வியாதி தொட்டிட்டுதோ... சரி இனி எங்கடை குடும்பத்திலும் புயல் வீசப் போகுது போலை..." என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் புத்தகங்களை கொண்டு போய் வைக்கிறாள் அமுதா. பக்கத்து வீட்டு ராஜேஸ் அக்காவும், மாமா கந்தசாமியும் அடிக்கடி சண்டை பிடித்து குடும்பத்தில் வெடிப்புகளை ஏற்படுத்தியதை அடிக்கடி பார்த்துப் பயந்து போன பிள்ளைக்குத் தன்னை அறியாமலேயே மேலும் பயம் வரத் தொடங்கிவிட்டது. அப்பாவும் அம்மாவும் ஒரு நாள் கூட பேச்சுப்பட்டிருக்க மாட்டார்களே. இந்தக் கண்டறியாத மிடில் ஈஸ்ட் பயித்தியத்தில வீணாகச் சண்டை பிடிக்கப் போகிறார்களே என்று மேலும் கலவரம் அடைந்த அமுதா "அம்மா, நீங்கள் அப்பாவுக்கு என்ன சொன்னியள்?" என்று கேட்டவாறு சாப்பாட்டைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"பிள்ளை நீ ஒண்டுக்கும் யோசியாதை... நான்நல்ல மருந்து வச்சிருக்கிறேன். குடுத்தால் கொப்பாவின்ரை நோய் தீர்ந்து போகும். நீ சாப்பிடு..." என்று ஆறுதல் கூறிவிட்டு, "தம்பி நீயும் வாடா... எனக்குக் குசினிக்கை வேலை கிடக்குது..." என்ற மீனாட்சி தொடர்ந்து வேலைகளைக் கவனிக்கப்போய் விட்டாள்.

ஒரு காலம் கொறனமேந்து உத்தியோகத்தர்கள் ஆட்டிப் படைத்த கிராமத்தை இன்று மிடில் ஈஸ்ட்டுக்குப் போன கையெ முத்துக் கூட போடத் தெரியாத பெடியன்கள் ஆட்டிப்படைப்பதும் காலத்தின் கோலம் தான். ஆனால் அந்தப் பணப் புயலில் சிக்கித் தத்தளிக்கும் மனோபாவம் மீனாட்சியிடம் இருக்கவில்லை. சிதம்பரப்பிள்ளை மட்டும் மணிக்கு 200 மைல் வேகத்தில் வீசும் அந்த மயக்கப் புயலில் சிக்கித் தவித்தார். இதை யெல்லாம் பார்த்த மீனாட்சிக்கு சிரிப்பும் மறுபுறம் தாங்க முடியாத வேதனையும் தான்.

மற்றப் பிள்ளைகள் எல்லாம் சொப்பர் சைக்கிளில் ஓடித்திரியும் போது அவரின் பிள்ளைகள் மட்டும் துடிக்கத் துடிக்கக் கொட்டும் வெயிலிலில் கால்கள் வேக வேக ஓடி வரும் காட்சியை மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை பல நாள்களாக அவதானித்து வந்தார். நானும் என்ரை பிள்ளைகளுக்கும் சொப்பர் வாங்கிக் கொடுக்காவிட்டால் ஆம்பிளை இல்லை. அந்தப் பெடியன் சீவரத்தினம் கட்டின பென்னம் பெரிய வீட்டைப் போலை ஒண்டு கட்டாட்டா நானும் ஒரு மனுசனே..."

ஆசை தொடர்கிறது.

" என்னப்பா தாலியிலை கை வைக்க வேண்டாம் எண்டாய் வேறு என்னத்தையாயிலும் செய்யச் சொன்னாய் ஒன்றும் சரிவரேல்லை. நேற்றுப் பத்துப் பேர் போட்டாங்கள். எல்லாரும் என்னைப் பார்த்து கிண்டல் பண்ணிறாங்கள் சத்தியமாய்த் தாப்பா நான் போய் இரண்டு மாதத்திலை மீண்டுத் தாறன் " எண்டு அடுத்த ரவுண்ட் ஆடுகிறார். மிஸ்டர் சிதம்பரம். எதையும் சகிப்புத் தன்மையுடன் அணுகி பிரச்சினைகளை தீர்த்துப் பழகிய மீனாட்சி வழமையான பொறுமையைக் கடைப்பிடித்து "காசு தான் எல்லாம் எண்டு நீங்கள் நினைக்கிறியளே... கையெ முத்துப் போடத் தெரியாததுகள் எல்லாம் பணக்காரராகிவிட்டால் அவை எல்லாம் பெரிய ஆக்களாய் விடுவினமே.

நீங்கள், படிச்சனீங்களெல்லே. நான் உங்களுக்குச்சொல்ல என்ன இருக்கு? கடவுளே என்று இது வரைக்கும் உங்களுக்கு ஒரு கெட்ட குப்பாடிப் பழக்கமும் இல்லை. நாங்கள் கலியாணம் கட்டி அந்தப் பதினைந்து வரியத்திலை ஒரு நாளும் என்னை நீங்கள் கண்கலங்க விடேல்லை. நானும் உங்களுக்கு ஏதேதும் குறை விட்டனானே. பிழை செய்தனானே. நாங்கள் நாலு பேர் தானே. இருக்கிற வரைக்கும் ஒண்டாய் இருக்க வேணும். ஏதெண்டாலும் மிச்சம் பிடிச்சு பிள்ளைகளையும் உங்கடை கவனத்தில் வளர்க்க வேணுமெண்டு நீங்கள் ஆசைப்படேல்லேயப்பா. உங்கடை மனம் என்ன வரவர கல்லாகுதே. நாலாயிரம், ஐயாயிரம் மயிலுக்கங்காலை விட்டுட்டு நான் நிம்மதியாக சோறு தின்னுவன் எண்டு நீங்கள் நினைக்கிறியளே. உங்களை ஒரு மாதத்துக்கு காணாவிட்டால் என்ரை நிலை..." என்றவள் முடியாமல் விசும்பிக் கொண்டே சிதம்பரப்பிள்ளையின் தோளில் தலையைச் சரித்துக்கொண்டாள்.

"சரியப்பா நான் போகேல்லை. நீ அழாதை " என்று மீனாட்சியின் தலையைத் தடவுகிறார் சிதம்பரம். எங்கிருந்தோ வந்த அமுதா, "நீங்கள் வெளியிலை போகவேண்டாம். எங்களோடை இருங்கோ. அம்மாவும் நானும் தோட்டத்திலே உழைச்சுத் தாறம். நீங்கள் கொழும்புக்கு வேலைக்குப் போங்கோ..." என்று அழுதாள். அந்தச் சின்னஞ் சிறு வயதிலை இவ்வளவு துணிச்சலுடன் சொன்னதைப் பார்த்த சிதம்பரம் எல்லா மிடில் ஈஸ்ட் எண்ணங்களுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டார். இட மாற்றமும் கொழும்புக்கு வந்து விட்டது. மீனாட்சி இராச் சாப்பாட்டைக் கட்டிக் கொடுக்க அதை மிஸ்டர் சிதம்பரப்பிள்ளை தன்னுடைய வழமையான "போட்" சூட்கேஸுக்குள் ஒரு மூலையில் வைத்து விட்டு கொழும்புக்குப் புறப்படுகிறார்.

"என்ன அமுதா அப்பா மிடில் ஈஸ்ட் பயணமோ..." என ஒரு நக்கல் பக்கத்து வீட்டு ராஜேஸ் அக்காவிடமிருந்து வந்தது. "இல்லை. அப்பா இஞ்சை பாங்கிலை காசு இல்லையெண்டு கொழும்பில் அடைவுவைக்க அம்மாவின்ரை தாலிக்கொடியைக் கொண்டு போறார்" என்று அமுதா மறுத்தாள்.

☒☒☒

வெசாக் லீவுடன் நாலைந்து நாள் கூடுதலாக லீவு எடுத்துக் கொண்டு ஊருக்கு வருகிறார் மிஸ்டர் சிதம்பரம். இனி எவ்வளவுதான் "ஃபொரின்" என்ற மயக்க ஊசியை லீட்டர் கணக்கில் ஊற்றினாலும் சிதம்பரத்தின் உடம்பில் வேலை செய்யாது. அவ்வளவு வாட்டு வாட்டி இருக்கிறாள் மீனாட்சி. எழுதுங் கடிதங்களில் எல்லாம் பொருளாதார சமூகப் பிரச்சினைகளை தெளிவாக எழுதியதனால் சிதம்பரத்தின் மனம் பக்குவப்பட்டிருந்தது. மெல்ல இரும்புக் கேட்டைத் திறந்து வளவிற்குள் காலை வைத்த சிதம்பரம் அப்படியே சூட்கேஸை வைத்து விட்டு பச்சைப் பசேலெனக் கண்ணுக்கு விருந்தளித்த வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்குத் தோட்டத்தைப் பார்த்துச் சொக்கிப் போனார். எல்லாம் எழுதியபடிதான் என் மனதிற்குள் முறுவலித்துக் கொண்டார்.

"நல்லவேளை. வந்திட்டியளே... வந்திட்டியளே... வெங்காயம் கிண்ட வேலையாட்கள் வரப்போகினை. கெதியாய் உடுப்பைக் கழட்டிப் போட்டு வாங்கோ லொறிக்காரங்களும் போட்டி போட்டுக் கொண்டு நிக்கிறாங்கள்".

"இப்ப அந்தர் நானூறாம். நான் சொன்னதைக் கேட்டியளே. பொடியன்கள் மிடில் ஈஸ்ட்டில் இருந்து கொண்டு வர்ற காசை நான் இனி நோட்டு நோட்டாய் அங்களிட்டை இருந்து வாங்கப் போறன். இது ஆருக்கு விளங்குது. எல்லோரும் இப்படி வெளியே போனால் ஆரப்பா தோட்டம் செய்யிறது?சாமான்கள் விலை விக்கத்தானே செய்யும். இப்ப உரத்தையும் மருந்தையும் வாங்குவார் இல்லையாம். தோட்டம் செய்தால்தானே அதுகளை ஆரும் வாங்கிறதுக்கு இனி வெங்காயம் மிளகாய், இறக்குமதி செய்யிறதில்லையாம். அவங்கள் எங்களிட்டைத் தானே வாங்க வேணும். என்னப்பா நான் விசரி மாதிரி அலட்டிறன் நீங்கள் கட்டில்லை இருந்தபடி சப்பாத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறியள்?" என்றாள் மீனாட்சி

" இல்லையப்பா. நீ பொம்பிள்ளை, உனக்கிருக்கிற துணிவும் உழைப்பும் எனக்கில்லை... எண்டதை நினைக்க வெக்கமாய்க் கிடக்குது" என்றார் சிதம்பரம். "சரி சரி உங்கடை விசர்க்கதையை விட்டிட்டு வாங்கோ" என்றபடி அவரின் சப்பாத்துகளைக் கழற்றி வைத்தாள் மீனாட்சி.

"இந்தாருங்கோ வெங்காயம் வித்த காசு முப்பதாயிரம். இதைக் கொண்டு போய் என்.எஸ்.பி.யில் போடுங்கோ... நாலு வருஷத்திலை வீடும் கட்டி, பிள்ளைக்குப் பிறகு சீதனமும் குடுக்கலாம்..." என்றாள் மீனாட்சி. "உன்னைப் போல எங்கடை பொம்பிளையள் எல்லாரும் இருந்தினமெண்டால்... இந்த உலகத்துக்கு என்ன குறை...? எண்டாலும் நீ சரியாத்தான் பொன்னம்பலம் வாத்தியாரிட்டை எக்கனமிக்ஸ் படிச்சிருக்கிறாய்..." என்று புழுகியபடியே சிதம்பரம் வங்கியில் பணம் போட நல்ல நாள் பார்ப்பதற்குக் கலண்டரைப் புரட்டுகிறார். ராஜேஸ் அக்காவின் கந்தசாமி இருந்த வேலையையும் விட்டு விட்டு தாலிக்கொடியையும் பசியாறி விட்டு ஏஜன்சியின் வாசலில் தவம் கிடக்கிறார்.

*21.03.1982 (மீள் பிரசுரம். )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.பிரகாஷ்



# அதிர வைக்கும் போர்க் கூட்டணி

உக்ரைன் - ரஷ்யா இடையிலான இராணுவ மோதல் படிப்படியான உக்ரைன் எல்லைகளைத் தாண்டி விரிவடையலாம் என்று கருதப்பட்ட பின்னணியில், நேட்டோவுக்குப் போட்டியாகவும் உலக நாடுகளை ஆட்டம்காணச் செய்யும் வகையிலும் ரஷ்யா - வடகொரியா இடையில் இராணுவக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையின் பின்புலம் நேட்டோவுடனும் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் நேரடித் தொடர்புடையது என்பது யாவரும் அறிந்ததே. நேட்டோவில் உக்ரைன் இணையச் சென்றதாலும் ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான கழுகுப் பார்வைக்கான வேவுக்களமாக உக்ரைனை மாற்ற முனைந்ததாலும்தான் இந்தப் போர் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ரஷ்யாவுடன் ஒப்பிடுகையில் உக்ரைன் இராணுவப் பலத்திலும் பொருளாதாரப் பலத்திலும் மக்கள் தொகையிலும் கிட்டவும் நிற்கமுடியாது. ஆனால், இந்தப் போரில் ரஷ்யாவை எதிர்க்கும் உக்ரைனுக்கு, 'தாராளப் பிரபுக்களாக' மாறியிருக்கின்றன நேட்டோ நாடுகள்.

உக்ரைனின் இராணுவம் ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டாலும் அது பயன்படுத்தும் அதிநவீன ஆயுதங்கள் எல்லாம் நேட்டோவின் 'அன்பளிப்புகள்'தான். போரின் முதல் நான்கு வாரங்களிலும் 'அணிசேரா' தன்மையுடன் இருப்பதாகக் காட்டிக்கொண்ட திரைமறைவு நகர்வுகள் இப்போது மெல்லமெல்ல வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளன. சீனாவின் இராணுவ உதவி ரஷ்யாவுக்குக் கிடைக்கின்றது என்ற குற்றச்சாட்டை தூக்கிப்போட்டுள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் குற்றச்சாட்டை நேட்டோ ஆதாரபூர்வமாக எண்பித்திருக்கின்றது. அமெரிக்காவுக்கு இராணுவ எதிரி ரஷ்யா என்றால் பொருளாதார எதிரி சீனாதான். அமெரிக்காவுக்கும் நேட்டோவுக்கும் சீனா தீர்க்க வேண்டிய பழைய கணக்குகள் பல உள்ளன. தியான்மன் முதல் தென்சீனக் கடல் வரை அந்தக் கணக்குப் பட்டியல் நீள்கின்றது. அதைவிட ரஷ்யாவுக்கு இந்நேரத்தில் கரம்கொடுத்தால் தென்சீனக்கடலில்தனது இராணுவ இருப்பைத் தக்கவைக்க சீனாவுக்கு பிற்காலத்தில் அது உதவக்கூடும். ஆக, சீனா ரஷ்யாவுக்கு இராணுவ உதவிகளைச் செய்வதற்கான அனைத்து முகாந்திரங்களும் உள்ள நிலையில் அமெரிக்காவின் குற்றச்சாட்டு நம்பக்கூடியதே.

ரஷ்யா எள் என்றால் எண்ணெயாக நிற்கக்கூடியது வடகொரியா. வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவும் ஐ.நா.வும் அள்ளிக்குவித்துள்ள பொருளாதாரத் தடைகளையும் தாண்டி இன்று வடகொரியா உயிர்ப்புடன் இருக்கின்றதென்றால் அதற்கு சீனாவும் ரஷ்யாவும் மிக முக்கியமான காரணங்கள். இப்படியிருக்கையில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நேட்டோ நாடுகளின் தலைவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் சமகாலத்தில், வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள புடின், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் பல ஒப்பந்தங்களைச் செய்துள்ளார். அதில், உலகின் போக்கை மாற்றக்கூடிய சக்தி மிக்கதாகவே இந்த இராணுவக் கூட்டணி அமைந்துள்ளது. ஆக, உக்ரைனுக்கு நேட்டோவின் துணையும் இராணுவ உதவிகளும் இருந்தால் அது தொடர்ந்தால் ரஷ்யாவுக்காக நான் இருக்கின்றேன் என்று நேரடியாகவே முகத்தில் அறைந்தாற்போல் சொல்லியிருக்கின்றது வடகொரியா.

> உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நேட்டோ நாடுகளின் தலைவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் சமகாலத்தில், வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள புடின், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் பல ஒப்பந்தங்களைச் செய்துள்ளார். அதில், உலகின் போக்கை மாற்றக்கூடிய சக்தி மிக்கதாகவே இந்த இராணுவக் கூட்டணி அமைந்துள்ளது

ரஷ்யா இன்று வினையாற்றிக் கொண்டிருக்கின்றது. ஆனால், அதற்கான விதை உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கியுடையது. அதுபோல் இப்போது அமெரிக்கா நேட்டோவை வைத்து காய்களை நகர்த்த ஆரம்பித்திருக்கின்றது. கீவ் எல்லையைத் தாண்டி போர் விரிவாகினால் அதன் விளைவுகள் பாரதூரமாயிருக்கும். காரணம், போரின் விளைவுகளை எண்ணி ரஷ்யர்கள் கவலைப்பட்டதாக வரலாறில்லை. அதற்கான தூபத்தை அமெரிக்காவும் நேட்டோவும் போடாவிட்டால் சரி.





# ஊர்ப்புதினம்

பாகம் 2

இராகவன்

பத்திரகாளிகோவில் திருவிழாவில இன்னுமொராள் வந்து பிரசங்கம் செய்தவர். கழுத்தில் நாலைஞ்சு உருத்திராட்சச் சங்கிலி போட்டிருப்பார். வல்லிபுரக்கோவில் பக்கமிருந்து வாறவர் எண்டு நினைக்கிறன். வல்லிபுர மாயவன்ர தீவிரபக்தர் எண்டதும் நினைவிருக்கு. அவர் பெயரும் ஏதோ ராம் எண்டதும் ஞாபகமிருக்கு. அவர் இதுக்குமுன்னம் ஒருக்கால் யாக்கருப்பிள்ளையார் கோவில்ல பிரசங்கம் செய்தவர். 'துருபதன்' கதை எண்டதுதான் தலைப்பு. அவர் அந்தப் பிரசங்கத்தை முடிக்கேக்குள்ள துருபதன் மகாவிஷ்ணு வரங் குடுத்துத்தான் துருவ நட்சத்திரமாக மாறினதெண்டு சொன்னார். ஆனால் நான் ஒருபுத்தகத்தில் சிவபெருமான் வரங்குடுத்துத்தான் துருபதன் துருவ நட்சத்திரமா மாறினதெண்டு வாசிச்சனான், இதை அத்தானிட்டச் சொன்னன். அத்தான் ஆரெண்டால் எங்கடை நவண்ணாவின் ஒரேயொரு தமக்கை இரத்தினேஸ் அக்காவின்ர கணவர். அவர் வதிரியிலாள். இஞ்சை வந்து கலியாணம் முடிச்சவர், கந்தராசா எண்டது அவரின்ர பெயர். அந்தாள் ஆன்மிகத்தில் வலுஈடுபாடு.

நவண்ணாவுக்கு அத்தான் எண்டால் எனக்கும் அத்தான்தானே. கலியாணங்கட்டின புதிசில அவர் ஊருக்கே அத்தானாயிருந்தவர். அவர் ஒரு அகலக்கரியர் ரலி சைக்கிள் வைச்சிருந்தவர். ஒவ்வொரு கோயிலுக்கும் தவறவிடாமல் போவார். சில நேரம் என்னையும் கூட்டிக்கொண்டு போவார் நான் அவரோட தான் வல்லிபுரக்கோயிலுக்குப் போறனான். அப்ப வல்லிபுரக்கோயில் வேறமாதிரியிருந்தது. குருக்கட்டுப் பிள்ளையார் கோயிலும் வல்லிபுரக் கோவிலும் அக்கம் பக்கமாயிருக்குது. ஆனால் அப்பயெல்லாம் ஒரே திறந்தவெளி கோயில் சுற்றுச்சூழலெல்லாம் ஒரே மணல்வெளி, நடக்க நடக்கக் கால்கள் புதையும், அத்தான்தான் என்னைப் பொலிகண்டிக்கந்தவனக் கடவைக்கும் கூட்டிக்கொண்டு போனவர், அதோட மானாண்டி மாதா கோயிலுக்கும் அவர்தான் என்னைக் கூட்டிக்கொண்டு. போனவர், இது நடந்தது 1987ஏப்ரல் நடுப்பகுதியில் மானாண்டி மாதா கோயிலுக்குத் தொடர்ந்து ஏழு செவ்வாய்க்கிழமை போய் மெழுகுதிரி கொளுத்தி மண்டாடினால் நினைச்சகாரியம் நடக்குமெண்டு அப்ப பரவலான நம்பிக்கையிருந்தது.

45

அந்த வரியந்தான் நான் அஞ்சாம் வகுப்பு ஸ்கொலசிப் சோதனை எழுத இருந்தனான். அப்ப நான் சைக்கிளோடப் பழகியிருந்த நேரம். அத்தானோட கூடிக்கொண்டு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மானாண்டி மாதா கோயிலுக்குப் போய் மெழுகுதிரி கொளுத்தி முட்டுகால்லையிருந்து ஸ்கொலசிப் சோதினை பாஸ்பண்ணோணும் மானாண்டி மாதாவே! எண்டு மண்டாடி வந்தன். அப்ப மானாண்டி மாதா கோயில் ஒரு பனையோலைக் கொட்டில். ஒரு சின்ன வளவுக்குள்ளதான் அது இருந்தது.

ஏழுசெவ்வாய் தொடர்ந்து வந்து வேண்டுதல் நிறைவேறினாக்கள் அங்கை கல்பணிஸ் கொண்டந்து எல்லாருக்கும் குடுப்பினம். என்ர துரதிர்ஷ்டம் நாலு செவ்வாய்க்கிழமை தொடர்ந்து போனன். அஞ்சாவது செவ்வாய்க்கிழமை வாறதுக்கிடையில் ஒப்றேசன் லிபறேசன் தொடங்கிட்டு. கடைசியில நான் எஸ்கொலசிப்பும் பாஸ் பண்ணேல்ல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பா.துவாரகன்

# நினைவுகளில் தமிழறிஞர்:

## திரு. க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

4

## தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் வல்லவர்

### நெஞ்சை உருக்கும் கதை

பண்டிதர் க. உமாமகேசுவரன் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த வியற்நாமியச் சிறுகதையான 'புதிய வீடு' வசந்தம் இதழில் 1965 ஆம் ஆண்டு பிரசுரமாகியது. 'நாம் கோ' இதனை வியற்நாமிய மொழியில் எழுதினார். இப்படி ஒரு கதையை மொழிபெயர்த்ததை நீண்ட காலமாக உமாமகேசுவரன் மறந்தே போயிருந்தார்? அல்லது அவர் கூறத் தயங்கியும் இருக்கலாம். பிரசுரமாகி ஏறத்தாழ 55 வருடங்களுக்குப் பிறகு நூலக இணையத்தளத்தில் இதனைத் தேடிக் கண்டெடுத்த அன்று நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். கதையை அவருக்கு வாசித்துக் காண்பித்தேன். இந்தக் கதை பிரசுரமான பின்னணியை அவர் சொன்னார்.

"நான் இந்தக் கதையை மொழிபெயர்த்து தெல்லிப்பழையிலே வீட்டிலே வைத்திருந்தேன். ஒரு நாள் வீட்டுக்கு வந்த எழுத்தாளர் செ. யோகநாதன் கதையைப் படித்துவிட்டு என்னிடம் கூறாமலே அதனை எடுத்துச் சென்று வசந்தம் இதழில் பிரசுரித்தார்".

"மூலத்தின் சுவை குன்றாது மொழிபெயர்த்தலுக்கு இம் மொழிபெயர்ப்பு சிறந்த உதாரணம்" என்ற குறிப்பொன்றையும் அறிமுகக் குறிப்பிலே செ. யோகநாதன் எழுதியிருந்தார்.

இந்தக்கதையை ஒரு நூலாக வெளியிடல் வேண்டும் என்றும் அதற்கு பொருத்தமான படங்கள் வரைதல் வேண்டும் என்றும் உமாமகேசுவரன் விரும்பினார். அந்த நூலிற்கு ஒரு முகவுரையுடன் அவருடன் நயந்த விடயங்களையும் எழுத எண்ணினேன். அவர் வாழ்ந்த போது அந்தச் சிறு நூலையாவது வெளியிட முடியவில்லையே என்று வருந்தும் அவரது "காலம் கடந்தேங்கும் இதயம்1" இது.

இணையத்தில் கண்டெடுத்த சிறுகதையை இலண்டனில் வசிக்கும் உமாமகேசுவரனது தம்பிக்கு மின்னஞ்சலில் அனுப்பினேன். இலண்டனில் வசிக்கும் மு. நித்தியானந்தன் இந்தக்கதையைப் படித்துவிட்டு அனுப்பிய சிறு குறிப்பை ஜெகதீஸ்வரன், "இந்த விவரத்தை அண்ணாவுக்குத் தயவுசெய்து தெரிவிக்கவும்" என்ற செய்தியுடன் எனக்கு மின்னஞ்சலிட்டார்.

*"அன்பின் ஜெகதீஸ்வரம்பிள்ளை அவர்களுக்கு,*

*உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களின் அழகிய மொழிபெயர்ப்பில் வெளியான 'புதிய வீடு' கதை நெஞ்சை உருக்கும் கதை. நேர்த்தியான கதை அமைப்பு, சுவையான தமிழில் அழகாக வெளிவந்திருக்கிறது. 'நாம் ஹோ'வின் ஏனைய கதைகளையும் தேடி வாசிக்கத் தூண்டுகிறது. இந்த அழகிய கதையினை மொழிபெயர்ப்புக்குத் தேர்ந்தமை உமாமகேஸ்வரம்பிள்ளையின் இலக்கிய ரசனையை காட்டுகிறது.*

*அன்புடன்*
*மு.நித்தியானந்தன் (2020.02.28)"*

சிறுகதையிலே, மூங்கிலால் கட்டிய குடிசை வீட்டிலே படிந்திருந்த வறுமையை வெளிப்படுத்தும் வரிகளையும் பரிவை ஏற்படுத்தும் உருக்கமான விடயங்களையும் நயந்தோம். திடீரென வீசிய புயலால் அழிந்துபோன வீட்டைப்பற்றி 'நாம் கோ' எழுதுவதை உமாமகேசுவரன் பின்வருமாறு தமிழில் தருகின்றார்.

"தங்கள் பிள்ளைகளை அளவுக்கதிகமாகவே நேசிக்கும் சில வயதான பெற்றோர், தங்கள் பிள்ளைகள் மீது ஈமச் சடங்குக்கான செலவை சுமத்தி விடக்கூடாது என்பதற்காகவே தாம் சாக விரும்புவதில்லை. ஏன் இப்படி என்னுடைய வீடும் எண்ணியிருக்கக் கூடாது?"

யாழ்ப்பாணத்தில் இன்று சாதாரண ஓர் அரச ஊழியரால் காணி வாங்கி வீடுகட்டுவதென்பது அரிது; அமைதியான வாழ்வும் கனவே. ஒரு காலத்தில் உலகில் மனிதர்கள் வாழச் சிறந்த இடமாக யாழ்ப்பாணத்தின் அழகிய கிராமங்கள் விளங்கின. 1980 களின் பின்னர் நியூயோர்க் நகரத்தில் சொந்தமாக ஒரு வீடு இருப்பது ஈழத்தமிழர்களின் கனவாகியது.

புதிய வீடு என்னும் வியற்நாமியச் சிறுகதையின் முடிவு பின்வருமாறு.

"இன்பம் என்பது எங்களைப் பொறுத்த வரையில் சிறியதொரு போர்வை. யாராவது ஒருவன் புரண்டு படுக்கையில், போர்வையை இழுத்துக்கொண்டால் மற்றொருவன் தன்னை மூடிக்கொள்வதற்குப் போதியளவு இல்லாது தவிக்கின்றான். நான் கெடுதி செய்ய விரும்பவில்லை. ஆனால் நான் என்னதான் செய்ய முடியும்? ஏன் வாழ்க்கை இத்தனை துயரம் நிரம்பியதாக இருக்கிறது. பிறிதொருவனுக்குத் துன்பம் தராமலே தன்னைப்பற்றி எண்ணமுடியாதா? "

சமகாலத்தில் வாழ்ந்த மதுரைப் பண்டிதர்கள் மூவர்



மதுரைப் பண்டிதர் க. நாகலிங்கம் (1920.03.20 – 2010.12.24) | மதுரைப் பண்டிதர் க. சச்சிதானந்தன் (1921.10.19 – 2008.03.21) | மதுரைப் பண்டிதர் ஆ.கனகசபை (1921.10.20 – 2006.04.13)



புதிய வீடு

மூலம்: நாம் ஹோ
தமிழில்: க. உமாமகேஸ்வரன்

### ஒரு புத்தகமும் ஒரு மொழிபெயர்ப்புச் சிறுகதையும்

உமாமகேசுவரன் எழுதிய கட்டுரைகள் நூற்றுக்கும் அதிகம்; கடிதங்கள் பல; பதிப்பித்த நூல்கள் சில. அதிதீரன் அவர் எழுதிய ஒரேயொரு நூல்; 13 கட்டுரைகளின் தொகுப்பு. புதிய வீடு, அவர் அதர்ப்படயாத்த(மொழிபெயர்த்த) ஒரேயொரு சிறுகதை. இது தமிழில் வெளியான சிறந்த மொழிபெயர்ப்புகளில் ஒன்று என்பது மு.நித்தியானந்தனது கணிப்பு.

உமாமகேசுவரன் சில வருடங்கள் நடமாட முடியாத நிலையில் இருந்தார். இருப்பினும் 'ஐபாட்' டில் தட்டச்சுச் செய்து கடிதங்கள் வரைந்தார். கடந்த ஆண்டு சமசெட் மோம் (Somerset Maugham) எழுதிய "Mr. Know All" சிறுகதையை மொழிபெயர்க்க விரும்பினார்; அது கைகூடவில்லை; அல்லது நான் அவருக்கு மொழிபெயர்க்க உதவவில்லை என்றும் கருதலாம்.

நியூயோர்க் நகரிலிருந்து போருக்குச் சென்று திரும்பிய வீரன் ஒருவன் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு கப்பலில் உல்லாசப் பயணம் செல்கின்றான். கதை நிகழ்களம் கப்பல். இந்தக் கதை தரும் படிப்பினை: "ஒரு புத்தகத்தை அதன் அட்டையை மட்டும் வைத்து நீங்கள் மதிப்பிடுவீர்களெனில் நீங்கள் ஏமாந்து போவீர்கள்" என்பது ஒரு வாசகனது கருத்து.

### மதுரைப் பண்டிதர்கள் மூவரிடம் கற்கும் பேறு

உமாமகேசுவரனது வாழ்க்கைக் குறிப்பைப் பதிவு செய்தவர்களில் ஒருவர் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன். உமாமகேசுவரன் யாழ்ப்பாணம், தமிழகம் என்ற இரு நாட்டு புலமைப் பாரம்பரியத்தினூடாக வந்தவர் என்று கௌரிகாந்தன் கலாசுரபி மலரில் நிறுவியுள்ளார்.

வீட்டிலே தந்தையார் கதிரிப்பிள்ளையிடமும் பரமேஸ்வரக் கல்லூரியில் வியாகரண சிரோமணி பிரம்மஶ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளிடமும் கற்று வடமொழியில் வல்லவரானார். இங்கிலீசுச் சட்டம்பியார் என அழைக்கப்பட்ட உமாவின் பெரிய தந்தையார் விஸ்வநாதரிடமும் பரமேஸ்வரக் கல்லூரியில் பேரா. வி. செல்வநாயகம், திரு. கனகசிங்கம், சுப்பிரமணிய ஐயர் ஆகியோரிடமும் கற்று ஆங்கில மொழியில் புலமை எய்தினார்.

உமாமகேசுவரன் பரமேஸ்வரக் கல்லூரியில் பயின்ற [illegible] முதலாம் வருடம் நவநீதகிருஷ்ண பாரதியாரிடம் தமிழ் கற்றார். [illegible] வித்துவான் வேந்தனார், பண்டிதர் ஆறுமுகம் கனகசபை ஆகியோரிடமும் தமிழ் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"வெள்ளை அண்ணை என்று அழைக்கும் பண்டிதர் ச.இராமச்சந்திரன் அவர்களே பரமேஸ்வரவில் எனக்குத் தமிழுணர்வை ஊட்டியவர். வெள்ளை அண்ணை பரமேஸ்வர விடுதிச்சாலையில் இருந்து மாலைவேளைகளில் கற்பிப்பார். இராமச்சந்திரனே மேடைப்பேச்சுக்கு எவ்வாறு தயார்ப்படுத்துவது என்பதை எனக்குக் கற்றுத் தந்தவர்" என்பார் உமாமகேசுவரன். யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இராமச்சந்திரன் பள்ளிக்கூடம் போகாமலே தனது பாட்டனாரிடம் கற்று ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய பண்டித பரீட்சையில் தனது 15 ஆவது வயதில் சித்தியெய்தினார். இராமச்சந்திரன் ஆயுள்வேத வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர்; வானியலிலும் மருத்துவத்திலும் வடமொழியிலும் வல்லவர். இராமச்சந்திரன் இளவயதில் இறந்தமை துயர்மிக்கது. மல்லாகத்தில் பண்டித மாணவ கழகத்தில் உமாமகேசுவரன் பயின்றபோது இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர், பண்டிதர் க. நாகலிங்கம், பண்டிதர் ச.பொன்னுத்துரை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரிடமும் கற்று பிரவேச, பால பண்டித தேர்வுகளில் சித்தியெய்தினார். அறிவை வளர்ப்பதற்காக தேசிகரிடம் வீடுசென்று கற்றதுடன் யாழ். நாவலர் பாடசாலைக்குச் சென்று வித்துவான் சுப்பையா பிள்ளையிடமும் பயின்றார். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில ஆசிரியருக்கான விசேட பயிற்சி பெற்றவேளை இரண்டாம் வருடத்தில் பண்டிதர் க. சச்சிதானந்தனிடம் தமிழ் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மதுரைப் பண்டிதர்களான க.நாகலிங்கம், க. சச்சிதானந்தன், ஆ. கனகசபை ஆகியோரிடம் கற்றதைத் தவப்பயன் என உமாமகேசுவரன் நினைவு கூர்வார்.

தந்தையார் கதிரிப்பிள்ளைக்கு அடுத்துத் தமிழைக் கற்றுத் தந்தவர் என்று இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகரை நினைக்குந்தோறும் 'இலக்கண அம்புலி காட்டிச் சிந்தையில் இன்பஞ் செழித்திடச் செய்த தேசிக மாமணிச் செவிலி' என்று உருகுவார். தேசிகரைச் சிறப்பித்து உமாமகேசுவரன் எழுதிய கவிதை வருமாறு :

*தேசிக மாமணி வாழ்க !*
*செந்தமிழ் மொழியின் செழுமையைச் சுவையை*
*திரட்டிநற் பாகெனச் செய்தே*
*என்றெனுக் கன்போ டெடுத்தெடுத் தூட்டி*
*இலக்கண அம்புலி காட்டிச்*
*சிந்தையில் இன்பஞ் செழித்திடச் செய்த*
*தேசிக மாமணிச் செவிலி2*
*கந்தவேள் அருளால் இசைபட வாழ்க*
*காலமெ லாந்தமிழ் வளர்த்தே.*

*1. மங்கை பங்கன் என்ற பெயரில் உமாமகேசுவரன் எழுதிய கட்டுரை. பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மலர் "கலாவதி"யில் (1967) பிரசுரமாகியது. இது பரீட்சை வினாத்தாளுக்கு அவர் எழுதிய கட்டுரை.*

*2. நற்றாய் உமாவின் தந்தை அமரர் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை*

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org